பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 07 திங்கட்கிழமை 19.02.2018 கதிர் 106

## வெளியேறுகிறார் சு.க. செயலாளர்?

கொழும்பு, பெப் .19

மஹிந்த ராஜபக்ஷவின் உதவியுடன் ஆட்சியமைப்பதானால், தான் வேறு கட்சியில் இணைந்து கொள்ள அனுமதிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார்.

பக்கம் 18

# கொழும்பு அரசில் குழப்பம்; தீர்வு விடயத்துக்குப் பாதகம்

## எச்சரிக்கிறார் மாவை எம்.பி.



யாழ்ப்பாணம்,பெப் .19

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் பாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் என்றஅச்சத்தைஏற்படுத்துவதாகவும் அரசியல் நகர்வுகளைக் கூட்டமைப்பு நிதானமாக அவதானித்து வருவதாகவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்

பக்கம் 18

# ரணிலை நீக்க மைத்திரி குறி; முடியாது என ஐ.தே.க. உறுதி

## நேற்றிரவு சந்திப்பும் பயனின்றி முடிவு



**கொழும்பு, பெப்ரவரி 19**

**நேற்று முன்னிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், சபாநாயகர் கருஜயசூரியவையும் திடீரென நேரில் அழைத்துப் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியை விட்டு இறங்குமாறு ரணில் விக்கிரமசிங்கவையும், அப்பதவியை ஏற்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவையும் கோரினார்.**

**ஆனால், அந்தப் பரிந்துரையை ஏற்க அவர்கள் இருவரும் நேரடியாக மறுத்தமையுடன், ரணில் விக்கிரமசிங்கதான் பிரதமர் என்பது ஐ.தே.கட்சியின் உறுதியான நிலைப்பாடு, அதில் மாற்றத்துக்கோ விட்டுக் கொடுப்புக்கோ இடமில்லை என ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகவும் உறுதிபடவும் தெரிவித்துவிட்டனர் என்றும் அறிய வந்தது.**

பக்கம் 18

# நாடாளுமன்றம் ஒத்திவைப்பா? இல்லையா?

## நேற்றிரவு மாறிமாறிப் பரபரப்புத் தகவல்கள்

கொழும்பு, பெப். 19

நாடாளுமன்றம் இன்று கூடவிருந்த நிலையில் அதைக் கடைசி நேரத்தில் தமக்குள்ள விசேட அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒத்திவைப்பதற்கு (Prorogue) ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் என நேற்றிரவு செய்திகள் வெளியாகின.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி நேற்று நள்ளிரவு வெளியிடவிருந்தார் எனவும் அரச உயர்மட்டத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற பேச்சுக்குப் பின்னர் இந்தச் செய்தி வெளியானதால்கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது.

ஆனால், நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும்பிரகடனம்எதனையும் ஜனாதிபதி வெளியிடவில்லை என்றும் –

அத்தகைய செய்திகள் தவறானவை என்றும் –

பக்கம் 18

# நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை உடனே நடத்துங்கள்!

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை



கொழும்பு, பெப். 19

நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்க கோரும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து, அதனை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம், நாடாளுமன்றத்தைக்

பக்கம் 18

## நிதியமைச்சை ஏற்க மறுத்தாராம் பந்துல



கொழும்பு, பெப். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மிடம் நிதியமைச்சுப் பதவியை ஏற்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்றும், ஆயினும் அதனை ஏற்கத் தான் மறுத்துவிட்டார் எனவும் கூட்டு எதிரணி எம்.பியான பந்துல குண

பக்கம் 18

# நல்லாட்சி தொடர வலியுறுத்துகின்றன மேற்குலக நாடுகள்

## மஹிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு இடமளிக்கவேண்டாம் எனவும் ஆலோசனை

**கொழும்பு, பெப்ரவரி 19**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சேர்ந்து அமைத்துள்ள நல்லாட்சி அரசு 2020 வரை தொடர வேண்டும் என வலியுறுத்தியுள்ள மேற்குல நாடு கள், மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அதிகாரத்துக்கு வருவதற்கு இடமளிக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டாம் என்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எச்சரித்துள்ளன என அறிய வருகின்றது.**

பக்கம் 18

# பெரும் ஆபத்தில் பொருளாதாரம்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, பெப் .19

தற்போதைய அரசியல் குழப்பங்களால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். அரசியல்

ஸ்திரமற்ற நிலைமை பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கும்என அவர் எச்சரித்துள்ளார்.

பக்கம் 18

## கொத்மலை தேக்கத்துக்குள் கார் வீழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு



ஹட்டன், பெப்.19

லிந்துலை மற்றும் தலவாக்கலை ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை பெயார்வெல் பகுதியில் நேற்று மாலை 3 மணியளவில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் மேல்

பக்கம் 18

# மைத்திரிபாலவுக்கு மஹிந்த அணி கடிதம்

கொழும்பு, பெப்.19

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியின் தலைமையில் அர சொன்று அமையுமாயின் கூட்டு எதிரணியினர் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவர் எனத் தெரிவித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக்கடிதம்மூலம் அவர்கள் அறிவித்துள்ளனர் எனக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்

பக்கம் 18

# தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதை ஏற்கோம்!

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன் நேற்றுக் கருத்து

வவுனியா, பெப். 19

தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று

பக்கம் 18

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் பதவிக்கான விவகாரம் பெரும் சூடு பிடிக்கும் சூழல் தென் படுகின்றது.

கூட்டமைப்பின் சார்பில் முதல்வர் பதவிக்கு ஆனோல்ட்டின் பெயர் அறிவிக்கப்பட்டமை முதலே கடும் சர்ச்சையை –நெருக்கடியை

காலைக்கதிர் Kalaikkathir



# தேர்தல் மூலம் மக்கள் வழங்கிய செய்தியை அரசாங்கம் தெளிவாக செவிமடுத்துள்ளது!

கொழும்பு, பெப். 19

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மூலம் மக்கள் வழங்கியுள்ள செய்தியை அரசு தெளிவாக செவிமடுத்துள்ளது என காணி அமைச்சர் கயந்த கருணாத்திலக தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்தவொரு ஸ்திரமன்ற நிலைமையும் ஏற்படவில்லை. எமது அரசு மக்கள் அன்று வழங்கிய ஆணைக்கு அமைய செயற்பட்டு வருகின்றது. எனினும் மக்கள்சிறந்த செய்தியொன்றை எமக்கு வழங்கியுள்ளனர்.

அந்தச் செய்தியை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். திருத்தப்பட வேண்டிய விடயங்களை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும்.

தயாரிக்கப்பட வேண்டிய விடயங்கள் தயாரிக்கப்பட வேண்டும். மறுசீரமைக்கப்பட வேண்டிய விடயங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.இது எமக்கு சிறந்த செய்தி.காலம் செல்வதற்குள் இந்த அரசுக்கு இந்த செய்தி கிடைத்துள்ளமை அதிஷ்டமானது. இறுதித்தருணம் வரை இருந்திருந்தால் நோய் முற்றியிருக்கும்.நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன.



கயந்த கருணாதிலக தெரிவிப்பு

நோயை குணப்படுத்தக்கூடிய முறைமையை கண்டறிந்து, நாம் உடனடியாக ஸ்திரமான அரசாக பயணத்தை ஆரம்பிப்போம்.

நாம் உடனடியாக மக்கள் மயப்படுத்தப்பட்ட மக்கள் கோருகின்ற விடயங்களை நிறைவேற்றுகின்ற அரசாக மக்களுக்குத் தெரியும் வகையில் மாத்திரமல்லாமல் உணருகின்ற விதமாக செயற்படுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க கருத்து

கொழும்பு, பெப். 19

நாட்டின் எதிர்கால பயணத்தை தீர்மானிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியில் காணப்படும் நெருக்கடி நிலை சம்பந்தமாகவும் அத்தநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.



கட்சியில் முழுமையான மாற்றங்களை ஏற் படுத்துவதன் மூலமேஎதிர்காலத்தில் வெற்றி பெற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய தேசியக் கட்சிக்குள்முழுமையான மாற்றம் ஏற்படுத்த வேண்டும். எம்மிடம் இருந்து பறிபோன வெற்றியை மீண்டும் பெற்றுக் கொள்ள மக்கள் உணரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அந்த மாற்றத்தின் மூலம் இது புதிய ஐக்கிய தேசியக் கட்சி என்பதை மக்கள் உணர வேண்டும்.

கடந்த காலத்தில் நம்பிய வேலைத்திட்டம் தோல்வியடைந்திருந்தால், புதிதாக சிந்திக்கும், புதிதாக ஆரம்பிக்கும் புதிய தலைவர் ஒருவருடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.கட்சிக்குள் பலர் இருக்கின்றனர். கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச போன்றவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்க முடியும். இவர்களை முன்னோக்கிக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மைத்திரியின் தொலைபேசி அழைப்பு; பேசாமல் நழுவினாராம் மஹிந்தர்!

கொழும்பு, பெப்.19

கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களின் ஒரு கட்டத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கூட்டு எதிரணியின் ஆதரவுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் முனைப்புகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட சூழலில், கடந்த வியாழக்கிழமை இரவு, மஹிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் அழைத்திருந்தார் மைத்திரிபால சிறிசேன.

எனினும், அந்த தொலைபேசி அழைப்புக்கு மஹிந்த ராஜபக்ஷ பதிலளிக்கவில்லை. அவரது மகனான நாமல் ராஜபக்ஷ தான் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்தார்.

தமது தந்தை சில முக்கிய வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசை அமைப்பதற்கு, சிறிலங்கா பொதுஜன முன்னணி ஆதரவு வழங்குவதுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து, நாமல் ராஜபக்ஷவுடன், மைத்திரிபால சிறிசேன பேச்சுக்களை நடத்தினார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.



## சட்டம் ஒழுங்கு அமைச்சை இழக்கும் சாகல ரத்நாயக்க

அமைச்சரவை மாற்றத்தின் போது, சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவியில் இருந்து சாகல ரத்நாயக்க விலக்கப்படவுள்ளார் என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



தெற்கு அபிவிருத்தி, சட்டம் ஒழுங்கு அமைச்சராக உள்ள சாகல ரத்நாயக்க பதவியை விட்டு விலக அண்மையில் அலரி மாளிகையில் நடந்த கூட்டத்தில் விருப்பம் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், அடுத்த சில நாள்களில் நடக்கவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது, சாகல ரத்நாயக்கவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி வழங்கப் படாது என்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் பதவி மாத்திரம் அவருக்கு வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது. அதேவேளை, சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவிக்கு சரத் பொன்சேகா நியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## பரிசளிப்பு விழா

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்லூரி வீதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபைத் தலைவர் இ. வசந்தசேனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக தென்மாட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

## கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மஹிந்தவுடன் இன்று சந்திப்பு

கொழும்பு, பெப்.19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசை ஸ்தாபிப்பது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.



ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகளுடன் கடந்த சில தினங்களில் நடத்தப்பட்ட பேச்சுக்களில்முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என்றும் எதிர்காலத்தில் அரசை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசு தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு இன்று தீர்வு எட்டப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்க இணங்கியுள்ளமையால் ஸ்திரமான அரசை அமைப்பதற்கு எந்தவித பிரச்சினையும் இல்லை எனபேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முக்கியமான அமைச்சு பதவிகளை கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதில் எந்த வித பிரச்சினையும் இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் அரசை அமைப்பதை தடுப்பதே தமது பிரதான நோக்கம் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல் .பீரிஸ் கண்டியில் வைத்து இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (க)

# அரசிலிருந்து சு.க. வெளியேறுகிறது!

## பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அறிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 19

**“தேசிய நல்லிணக்க அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுகின்றது.**

**“புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றின் கருத்தை அறியவிருக்கின்றார்.”**

**– இவ்வாறு நேற்றிரவு அறிவித்தார் பிரதி சபாநாயகரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகருமான திலங்க சுமதிபால.**

நேற்றிரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே திலங்க சுமதிபால இந்த அறிவிப்பை விடுத்தார்.

அண்மைக்காலத்தில் கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளின் பின்னணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அதிகம் நெருக்கமாகச் செயற்பட்டு வந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவியில் உள்ள பிரதமர் ஒருவரை நீக்கி, அவரின் இடத்துக்குப் புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பது தொடர்பில், தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய தமக்குள்ள அதிகாரங்களை உயர்நீதிமன்றத்திடமிருந்து கேட்டறிந்து, அதனடிப்படையில் இவ்விடயத்தைக் கையாள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புகின்றார் எனக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் அத்தகைய கோரிக்கை தொடர்பில் உயர்நீதிமன்றம் தனது கருத்தை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவதற்கு சில தினங்கள் தேவைப்படும் என்பதனால், அதுவரை நாடாளுமன்றம் கூடுவதைத் தவிர்ப்பதற்காக நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைப்பது குறித்து ஜனாதிபதி பரிசீலித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் திட்டவட்டமான ஒரு தீர்வு கிட்டும் வரை நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் விதத்தில் தாம் பிரகடனம் ஒன்றை விடுக்கலாமா என்பது குறித்தும் தாம் பரிசீலிக்கின்றார் என நேற்றிரவு தம்மைச் சந்தித்த பிரதமருக்கும், சபாநாயகருக்கும் ஜனாதிபதி தெரியப்படுத்தினார் என்றும் கூறப்பட்டது. (உ)

# ஐ.தே.கவிடம் பெரும்பான்மை; பிரதமராக ரணில் தொடர்வார்

ஐக்கிய தேசியக் கட்சியிடமே பெரும்பான்மை உண்டு. அதனால் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தொடர்வார் என்று அந்தக் கட்சியின் மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

கூட்டு அரசிலிருந்து விலகுவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றிரவு தெரிவித்துள்ளதே எனக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலகினால் அந்தக் கட்சியிலுள்ள அமைச்சர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைவர்– என்றார். (ஐ)

★ அமைச்சர் பதவியை இப்போது ஏற்க மாட்டடேன்
★ கூட்டமைப்பை ஆதரிக்கும் முடிவு ஏதும் இல்லை
★ ஆனோல்டை மேயராக்கக் கட்சிக்குள் எதிர்ப்பு

# ஈ.பி.டி.பியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப்.19

தான் மீன்பிடி அமைச்சராக பதவி ஏற்க உள்ளார் என வெளிவரும் செய்திகள் தவறானவை என்று நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணையாமல் தொடர்ந்தும் வெளியில் இருந்து தனித்துவத்தை பேணுவதற்கே தாம் திடம் கொண்டு இருக்கிறார் எனத் தெரிவித்த அவர், அண்மைய நாள்களில் பல புரளிகள் கிளப்பப்படுகின்றன எனவும் கூறினார்.

இதேவேளை யாழ். மாநகர சபையில் ஆட்சியமைத்தல் மற்றும் ஏனைய உள்ளூராட்சிசபைகளின் தொங்கு சபைகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த டக்ளஸ் தேவானந்தா, பல சபைகளில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு ஆட்சியமைத்தால் அவர்கள் முன்வைக்கும் திட்டங்களின் அடிப்படையில் – மக்களின்நலன்அடிப்படையில் – வெளியில் இருந்து ஆதரவு அளிக்கப்படும் எனத்தான் கூறினார் என்று தெரிவித்தார். அவ்வாறு தெரிவித்தமை கூட்டமைப்புடன் இணைவது அல்லது கூட்டமைப்பை ஆதரிப்பது என்று பொருள்படாது எனக் கூறிய அவர், மக்களின் நலன் அடிப்படையில் சபைகளின் இயக்கத்திற்கு குந்தகம் விளைவிக்காமை என்ற முனைப்புடன் செயற்படத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் கூறினார்.

எனினும், தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் மாநகரசபையில் ஆட்சியுரிமை கோரவுள்ளனர் என அறிவித்திருக்கும் நிலையில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து கட்சியினுள் தாங்கள் விவாதங்களில்ஈடுபட்டுள்ளனர் எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

குறிப்பாகக் கூட்டமைப்பினர் ஆனோல்டை மேயராக்க முனைகின்றமையைத் தமது கட்சியின் உறுப்பினர்கள் பலர் விரும்பவில்லை என்ற நிலையில் தமது உறுப்பினர்களை சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிப்பதா, அல்லது கட்சி எடுக்கும்தீர்மானத்திற்கு கட்டுப்பட்டுச் செயற்படுமாறுபணிப்பதாஎன்ற முடிவுக்குத் தாம் இன்னும் வரவில்லை எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# நல்லாட்சிக்கு உறுப்புமாற்று சத்திரசிகிச்சை

## அமைச்சர் ராஜித கூறுகிறார்



கொழும்பு, பெப்.19

நல்லாட்சி அரசுக்கு தற்போது உறுப்பு மாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உடல்உறுப்புகளைத்தானம் செய்யும் சர்வதேச தினத்தை முன் னிட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனை ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு பாதயாத்திரை நேற்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு கூறினார்.

எனினும் அதன் பின்னர் இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ள அவர், எதிர்காலத்தில் உறுப்பு மாற்றுச் சத்திரசிகிச்சையை முற்றிலும் இலவசமாக மேற்கொள்வதற்கான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தவுள்ளன எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போதைக்கு உறுப்பு மாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் மருத்துவமனைகளுக்கு மேலதிமாக மாகாண மட்டத்தில் மேலும் பல மருத்துவமனைகளிலும் உறுப்பு மாற்றுச் சத்திரசிகிச்சை அறிமுகப்படுத்தப்படும் என்றும், மருத்துவர்கள் அதற்காக தயார் நிலையில் இருக்கின்றன எனவும் அவர் கூறினார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– அவர் எதிர்கொண்டு வருகின்றார்.

முதல்வர் வேட்பாளராக ஆனோல்ட் நியமிக்கப்பட்ட முறைமை அவரது கட்சிக்குள்ளேயேஅதிருப்தியை–எதிர்ப்பை – ஏற்படுத்தியது என்பது தெரிந்ததே.

தமிழரசுக் கட்சிக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும், பொது வெளியில் தமிழர் மத்தியிலும், தமதுஎதேச்சாதிகாரநடவடிக்கை மூலம் அதிருப்திக்கு உள்ளாகியிருக்கும் சுமந்திரன் எம்.பி, அதேமுறையில் தமது ஆளாக ஆனோல்ட்டை வெளிப்படுத்தி, முதல்வர்வேட்பாளராகஅறிவித்தமை தொடக்கம் ஆனோல்ட்டுக்குச் சிக்கலோ சிக்கல்.

அவர் முதல்வராவதில் அவரது கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு – முணுமுணுப்பு – அதிகம் உண்டு. எனினும் சுமந்திரனின் ஆள் அவர் என்பதால் அதிருப்தித் தரப்புகள் தங்களின் எதிர்கால நலன் கருதி வாய்மூடி மௌனிகள் வேடம் போடுகின்றன.முதல்வர்தெரிவில்இரகசிய வாக்கெடுப்பு என்று வந்தால் அவை தம் கைவரிசையை நிச்சயம் காட்டிவிடும்.

இதற்கிடையில், ஆனோல்ட் தான் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் என்றால் தங்கள் தரப்பில் மணிவண்ணன் களம் இறங்குவார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஒற்றைக்காலில் நிற்கின்றது.

ஈ.பி.டி.பியிலும்,ஆனோல்ட்டை முதல்வராக்க விடுவதில்லை என்பதில் அவரின் உறவினரான றெமீடியஸ்விடாப்பிடியாக உள்ளார். இந்த நிலைப்பாட்டுக்கு அதன் தலைவர் டக்ளஸின் ஆசியும், ஆதரவும் உண்டு என்றும் தெரிகின்றது.

ஆனோல்ட்டை முதல்வர் வேட்பாளராக எதேச்சாதிகாரமாக முடிவெடுத்து அறிவித்ததுடன் யாழ். மாநகரத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்கு ‘சனி’ப்பார்வைபிடித்துக்கொண்டது.

தேர்தல் முடிவு என்ற இந்தப் பின்னடைவுக்குப் பின்னரும், அவரையேஅப்பதவிக்குவிடாப்பிடியாகநிறுத்துவதில்மார்ட்டின் வீதி தீவிரம் காட்டுகின்றமையால், இப்போது யாழ். மாநகர சபையில் தனித்து அதிக இடங்களைக் கைப்பற்றியும்கூட, முதல்வர் பதவியைக் கோட்டை விட வேண்டிய நெருக்கடி கூட்டமைப்புக்குஏற்பட்டுவிடும்எனப் பச்சாதாபப்படுகின்றனர் பல தரப்புகளுடனும் தொடர்பாடல்களைக் கொண்ட நடு நிலையாளர்கள்.

38 பேர் கொண்ட மாகாண சபைக்கு 30 பேருடன் பதவிக்கு வந்த முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அல்வா கொடுத்தவர் அல்லவா ஆனோல்ட்?

45 பேர் கொண்ட மாநகர சபைக்கு ஆக 17 பேருடன்வந்து அவர் முதல்வர் ஆவரா? முதல்வரானாலும் அதில் அல்லாடாமல் அவர் பதவி வகிக்க முடியுமா? – என்பவற்றுக்கெல்லாம் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

-மின்னல்-

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் உரிய காலத்தில் நடக்காமல் போகும்

தென்னிலங்கை அரசியல் களேபரத்தில் சிக்குண்டு அமைதித் தீர்வுக்கான சமரச முயற்சிகள் சிதைந்து போகப் போகின்றன என்பது ஒரு புறமிருக்க, இந்த அரசியல் நெருக்கடிகளினால் அரசியல் போக்கில் பல திருப்பங்களும் இடம்பெறப்போகின்றன என்று எச்சரிக்கின்றன கொழும்பு செய்தி வட்டாரங்கள்.

அதில் முக்கியமான ஒன்று - தேர்தல் சீர்திருத்த முயற்சி அடிபட்டுப் போகப்போகின்றது என்பதாகும்.

நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இதுவரை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. அதில் குறைபாடுகள் பல இருக்கின்றன, விருப்பு வாக்கு முறைமையினால் பெரும் நெருக்கடிகள் எழுந்துள்ளன என்றெல்லாம் தொடர்ந்து கூறப்பட்டு வந்தமையால் அந்தத் தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

தொகுதி முறையையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் கலந்த ஒரு தேர்தல் பொறிமுறைமையை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டு, அதுவே இந்தத் தடவை - முதல் தடவையாக - தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதேபோன்ற முறைமையை பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கும் அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சமயத்திலேயே கொழும்பில் நல்லாட்சி அரசுக்கு ஆப்பு விழும் சூழல் கட்டவிழ்ந்திருக்கின்றது.

உத்தேச தேர்தல் சீர்திருத்தங்களை திட்டமிட்டபடி நடைமுறைக்குக் கொண்டு வருவதாயின் நாடாளுமன்றத்தில் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு அவசியம்.

நாட்டின் பிரதான கட்சிகள் இவ்விவகாரத்துக்காகவேனும் நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டு நின்றால்தான் அதற்கு சாத்தியம் உண்டு. ஆனால், தற்போது தெற்கில் கட்டவிழ்ந்துள்ள அரசியல் சூழ்நிலை அதற்கு வாய்ப்பானதாகத் தென்படவில்லை.

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட முறைமை மக்களின் பிரதிநிதித்துவ கருத்தை கனகச்சிதமாகப் பிரதிபலித்துள்ள போதிலும், பல உள்ளூராட்சி சபைகளில் ஆட்சித் தரப்பைத் தெரிவு செய்வதில் தொங்கு நிலைமை ஏற்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிருப்தியுற்றிருக்கும் அரசியல் தலைமைகள் தொடர்ந்து இதே தேர்தல் முறைமையை பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கு மாற்றுவதற்கு விரும்பாமல் போகக்கூடும்.

அதனாலும், தற்போது தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களினாலும் உத்தேச தேர்தல் சீர்திருத்தம் எதிர்வரும் காலத்தில் சாத்தியமாகாமல் போகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அப்படியாகுமானால், இரண்டு விடயங்கள் இடம்பெறுகின்றமை தவிர்க்க முடியாததாகும்.

ஒன்று - அடுத்த நாடாளுமன்றத் தேர்தலும் தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழேயே நடத்தப்படும். ஒரு கட்சியின் வேட்பாளர்களிடையே விருப்பு வாக்குக்கான போட்டி, இழுபறி எல்லாம் இனிமேலும் தொடரும்.

அடுத்தது - இழுபறி நிலையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல் முறைமை விடயம் தீர்மானிக்கப்படாமல் - முடிவு செய்யப்படாமல் - இழுபடும். அதனால் வடக்கு மாகாண சபை உட்பட பல மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் காலவரையறையின்றி நடத்தப்படாமல் தள்ளிப் போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இப்போது நடைபெற்று முடிந்த, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு முன்னர் சுமார் நான்கு வருடங்களாக அந்தச் சபைகள் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுபறியில் இருந்தமை பலருக்கும் நினைவிருக்கலாம். அந்த நிலைமை மாகாண சபைகளுக்கும் வருவது தவிர்க்க முடியாமல் இருக்கும்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களை புதிய முறைமையின் கீழ் நடத்துவதற்கான தேர்தல் திருத்தச் சட்டம் 2012 இல் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்கு அமைவாக எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டு, அது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டது 2017 பிற்பகுதியில்தான். அதனால்தான் 2018 பெப்ரவரி வரை அத்தேர்தல்களை நடத்த முடியாமல் போயிற்று.

அதே நிலைமைதான் இப்போது மாகாண சபைகளுக்கும். அவற்றுக்கான தேர்தல் சீர்திருத்தச் சட்டம் கடந்த ஆண்டு இறுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது. மாகாணத்துக்குள் வட்டாரங்களை அல்லது தொகுதிகளை மீள் நிர்ணயம் செய்து அதனைச் சட்டமாக்கும் பணி இந்த ஏப்ரலுக்குள் முடியும் என்றார்கள்.

ஆனால், அதற்குள் கொழும்பில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளமையால், அந்த எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான சட்டவாக்கல் நடவடிக்கை தாமதமாகும் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பான எல்லை மீள் நிர்ணயக்குழு அவசர அவசரமாகத் தனது பணியை முடித்து, இறுதி அறிக்கையைத் தயார் செய்து விட்டது. ஆனால் அதை சமர்ப்பிக்க வேண்டாம், இடைக்கால நகல் ஒன்றையே இப்போதைக்கு தாருங்கள் என்று தற்சமயம் அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது எனவும், இது காலத்தை இழுத்தடித்து மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப் போடும் அரசு உயர்பீடத்தின் ஒரு தந்திரோபாயம் எனவும் கொழும்புச் செய்தி வட்டாரங்களில் தகவல் வெளியாகியிருக்கின்றது.

ஏற்கனவே மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்து விட்டது. அங்கு ஆளுநர் நிர்வாகம் நடக்கின்றது. இந்தச் செப்ரெம்பரில் வடக்கு மாகாண சபை உட்பட மேலும் மூன்று சபைகளின் பதவிக் காலம் முடியப் போகின்றது.

இந்த செப்ரெம்பருக்குள் மாகாண சபைகள் தேர்தல் சட்ட ஏற்பாடு நாடாளுமன்றத்தினால் பூர்த்தி செய்யப்படாவிட்டால், மொத்தம் ஆறு சபைகளின் பதவிக் காலம் முடிந்த பின்னரும் தேர்தலை நடத்த இயலாத இழுபறி நிலை தொடர்வது தவிர்க்க முடியாததாகும்.

# கோட்டாவை அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலகி இருக்குமாறு ஜோதிட ஆலோசனை



கொழும்பு, பெப். 19

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலகி இருக்குமாறு ஜோதிட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கோட்டபாய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் ஜோதிடம் பார்க்கச் சென்றுள்ளனர்.

அனுராதபுரத்தில் உள்ள ஞானம்மா என்பவரை சந்திப்பதற்கே இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் சென்றுள்ளனர்.

இதன்போது தொடர்ந்து அரசியலில் இருந்து விலகியிருக்குமாறு கோட்டாபயவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் எவ்வித அரசியல் மாற்றங்களும் ஏற்படாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷர்கள்ஜோதிடத்தின் மீது தீவிர நம்பிக்கை கொண்டவர்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் ஜோதிட ஆலோசனைக்கு அமைய மஹிந்த பதவியை பறிகொடுத்தார்.

இந்த நிலையில், 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் கோட்டாபய போட்டியிடத்திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் ஜோதிடரின் ஆலோசனை அவரை பெரிதும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது என அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# திருமலையில் வெடிபொருள்களுடன் ஐவர் கைது!



கொழும்பு, பெப். 19

திருகோணமலை லங்கா பட்டினம் பகுதியில் வெடிக்க வைப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஜெலட்னைட் வெடிபொருள்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம்திருகோணமலை மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து நடத்தியசோதனைநடவடிக்கையில் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்த வெடிக்க வைப்பதற்காக தயார் நிலையில் இருந்த 2 ஜெலட்னைட் வெடிபொருள்களுடன் 49 ஜெலட்னைட் கூறுகள், டெற்றனேட்டர்கள் 9, ஒக்சிஜன் சிலின்டர்கள் 5 உட்பட நீச்சல் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

# வடக்கு, கிழக்கு வாழ் மாவீரர் குடும்பங்கள் முன்னாள் போராளிகளுக்கான கலந்துரையாடல்





கொழும்பு, பெப். 19

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மாவீரர் குடும்பங்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொதுநோக்கு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, மாவீரர் குடும்பங்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்ற போராளிகள், இறுதி யுத்தத்தின் பின்னர் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடி நிலையை ஆராய்ந்து தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்த விசேட கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# புத்திக பத்திரன, சுஜீவ சேனசிங்க கலந்துரையாடலை புறக்கணிப்பு!

கொழும்பு, பெப். 19

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுக் காலை சிறிகொத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட கலந்துரையாடலில் புத்திக பத்திரன மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்திக பத்திரன மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோர்மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர் என உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

(க)

## நாளை

20.02.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : ரேவதி பி.ப 1.00 வரை
திதி : பஞ்சமி பி.இ 3.19 வரை
சுபநேரம் : 11.02 – 12.32 வரை
இராகுகாலம்: 3.32 – 5.02 வரை

# உயர்நீதிமன்ற வாசற்படியில் தடுக்கி விழுந்தார் மஹிந்த!

கொழும்பு, பெப். 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்ற வாசற்படியில், தடுக்கி விழுந்த நிலையில், அருகில் இருந்து உதவியாளர்கள் தாங்கிப் பிடித்ததால், காயங்களின்றித் தப்பியுள்ளார்.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது உயர் நீதிமன்றத்தில் புதிய சட்டவாளர்களுக்கான உறுதிமொழியேற்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இதில், மஹிந்த ராஜபக்ஷவின், பெறாமகளும் சட்டவாளராக உறுதிமொழியேற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த, மகிந்த ராஜபக்ஷ,சமல்ராஜபக்ஷ,பசில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோர் குடும்பத்துடன் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது உயர்நீதிமன்ற வாசற்படியில் கால்வைத்து ஏறியபோது மஹிந்த ராஜபக்ஷ, கால் தடுக்கி, நிலை தடுமாறி கீழே விழப்போனார்.

அப்போது அருகில் இருந்த அவரது உதவியாளர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டதால் நிலத்தில் அடிபடாமல் காப்பாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## தாயும், மகனும் தற்கொலை

கொழும்பு, பெப். 19

கண்டி, முல்கம்பளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தாயும், மகனும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கண்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தாயும், மகனும் இரண்டு தினங்களுக்கு முன்னர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் 69 வயதான தாயும் 44 வயதான மகனும் உயிரிழந்துள்ளனர். தற்கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. கண்டி பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவத்தினருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள்!

கொழும்பு, பெப். 19

பொது மன்னிப்புக் காலம் நிறைவடைந்த நிலையில் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற 2 ஆயிரத்து 764 சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் என இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இராணுவ ஒழுக்காற்று விசாரணையின் பின்னர், கைது செய்யப்பட்டுள்ள சகல சிப்பாய்கள் அனைவரையும் சேவையில் இருந்து மீண்டும் வெளியேற்றுவதற்கான பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டதுடன், இந்தக் காலப் பகுதி நவம்பர் மாதம் 23 ஆம் திகதியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதையற்ற நாடு; 11 ஆவது கருத்தரங்கு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக் கருவிற்கு அமைய நடைமுறைப் படுத்தப்படும் போதையற்ற நாடு என்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணைவான கருத்தரங்கு கொத்மலையில் நடைபெற்றது.

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் விதுல சிறுவர் வானொலியும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இந்த 11 ஆவது கருத்தரங்கு கொத்மலை கடதொற மகாவலி மஹாசெ விஹாரையில் நேற்று இடம் பெற்றது.

'ஒழுக்கமிக்க சந்ததி - போதையற்ற நாடு' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த கருத்தரங்கு இடம்பெற்றது.

போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும், சிரேஷ்ட போதைப் பொருள் ஒழிப்பு அதிகாரியுமான எச்.எம். திலகரத்ன பிரதான உரையை ஆற்றினார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிளும் நாவலப்பிட்டி ஹபுகஸ்தலாவ, நம்பொடை, கட்டுகித்துல போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் இந்தக் கருத் தரங்கில் பங்கேற்றனர்.

## வாரியபொல விபத்தில் இளம் பெண் சாவு

கொழும்பு, பெப். 19

வாரியபொல - பாதெனிய பஸ் நிலையத்தின் அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை இந்த விபத்து இடம் பெற்ற நிலையில் பாதெனிய - வீரகஹமுல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இறைபாதையை செப்பனிட வாருங்கள்



தவக்கால சிந்தனை

பாதைகளை செப்பனிட பல முயற்சிகள், சிரமதானங்கள், கோரிக்கைகளை மேற்கொண்டு வரும் நாம் பங்கேற்போர், பங்கேற்காதோர், உதவ முன்வருவோர் என பலரகத்தினர் எமது செயலுக்குள் காண்கிறோம். இதற்கான நிர்வாக திறன் மிக்கோரையும் தெரிவு செய்து கொள்கிறோம். ஆனால், எமது தெரிவுகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றமாகும் போது குழப்பமடைகிறோம், வேதனைப்படுகிறோம் இவை மனித இயல்பாகவே உள்ளன. சாதாரண செயலுக்கே போட்டி, பொறாமைகள், பங்கேற்புகள், கௌரவ பரிகசிப்புக்கள், ஏமாற்றங்கள் சவாலாகின்றன.

இவை எமது இறை பயணத்திற்கான பாதையை செப்பனிட பங்கேற்க அழைக்கப்படும்போதும் எமது மனம் அர்ப்பணத்தோடு ஆர்வத்தோடு, தூய மன ஆசைகளுடன் எம்மை தயார்படுத்த அழைக்கப்படும் காலமே இத்தவக்காலமாகும். இயேசு தன் தவப்பணத்தைத் தொடர இறைதிட்டத்தை நிறைவேற்ற முன் ஆயத்தமாக ''பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார். அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார். அங்கு காட்டு விலங்குகள் இடையே இருந்தார். வான தூதர் அவருக்கு பணி விடை செய்தனர்'' என நற்செய்தி சொல்கிறது.

எமது ஆன்மீக பயணத்திலும் இறை பாதைகள் செப்பனிட முயலும்போது சாத்தானின் சோதனைகள் உலக மாய கவர்ச்சிகள் களியாட்டக் கோரிக்கை தூண்டல்கள் உங்கள் தவமுயற்சிகளுக்கு தடையாக இருக்கலாம். இதற்கு உடந்தையாக உங்கள் சூழல், நட்பு குடும்பபின்னணிகள் பல வழிகளில் சவாலாகத் திசைதிருப்பலாம். இதனை வெல்லும் மன வலிமை உங்களிடம் இல்லையெனில் மனச்சஞ்சலம் திசைமாறி பாதைமாறும் பயணமாகி விடும். பார்வைகள் குருடான செயல்களில் ஈடுபட தொடங்கிவிடும், நாமே பிறரது நல்வழி பயணத்துக்கு தடையுமாக மாறலாம். இதனை மனத் துணிவுடன் தூய்மையுடன் இறை பற்றுதியுடன் சலனங்கள் சபலங்கள் குழப்பத்தை ஏற்படும் போதெல்லாம் எமது ஆன்மீக பற்றுறுதி பலவீனமானால் இன்றைய யதார்த்த நிலைகள் போன்று போலிகளே வேலிகளாகி திசை திருப்பலுக்கு நாமும் பலிக்கடா யாகி விடலாம். இத் தருணத்தை வெல்ல இத்தவக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கிறது.

- செ.யோசப்பாலா -

## மன்னார் மறை மாவட்ட ஆயருக்கு வவுனியாவில் கோலாகல வரவேற்பு !

வவுனியா, பெப். 19

மன்னார் மறை மாவட்ட ஆயர்கலாநிதி இமானுவெல் பெர்னாண்டோ ஆண்டகைக்கு நேற்று வவுனியாவில் கோலாகல வரவேற்பு வழங்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆயர் முதல் தடவையாக வவுனியா மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளமையை யடுத்து இந்த வரவேற்பு இடம்பெற்றிருந்தது.

வவுனியா அந்தோனியார் ஆலயத்தின் அருட்தந்தை உட்பட அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் உட்பட



பங்கு மக்களால் அழைத்து வரப்பட்ட ஆயர் அந்தோனியார், ஆலயத்தில் திருப் பலி ஒப்புக்கொடுக்கும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக வவுனியா கந்த சாமி கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ க.கந்தசாமிக் குருக்கள் கலந்துகொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir



# திருமலையில் சட்டத்தரணிகளுக்கான செயலமர்வு




திருகோணமலை,பெப்.19

சட்டம் பற்றிய சிறந்த அறிவுத்திறனை மேம்படுத்தி பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் செயலமர்வொன்று திருகோணமலையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தச் செயலமர்விற்குப் பிரதம விரிவுரையாளராக சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய கலந்து கொண்டு குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டத்துறை தலைமை அதிபரால் ஆலோசனை பெறுதல் தொடர்பில் விளக்க மளித்துள்ளார்.

திருகோணமலை அம்பாறை, பிபிலை, பொலன்னறுவை, சம்மாந்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்ட சட்டத்தர ணிகள் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். (ப)

## 2 குழந்தைகளின் தாய் தீயில் கருகி உயிரிழப்பு

மட்டக்களப்பு,பெப்.19

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கோப்பாவெளி, 78ஆம் கட்டை எனுமிடத்தைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண்ணொருவர் தீயில் கருகி மரணித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குழந்தைகளின் தாயான கிருஷ்ணப்பிள்ளை இராஜினி என்பவரே நேற்று முன்தினம் இரவு தீயில் எரிந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மரணமானார்.



சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது. சம்பவதினம் தனது வீட்டில் இப்பெண் பகல் போசனம் சமைத்துக் கொண்டிருந்துள்ளார்.

அதன் பின்னர் மாலையாகியும் வீட்டில் எதுவித நடமாட்டங்களும் இல்லாததால் அயலிலுள்ளவர்கள் மாலை 5 மணியளவில் பெண்ணின் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது இளம் பெண் தீயில் கருகிய நிலையில் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தார்.

உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அவர் உயிரிழந்து விட்டார் எனப் பெண்ணின் உறவினர்கள் பொலிஸ் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் பற்றி பொலிஸார் விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# அரசில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது

மட்டக்களப்பு,பெப்.19

தேசிய அரசாங்கத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என நம்புகிறேன் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு நல்லையா வீதியில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இப்போது முடிந்திருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் படி இருக்கின்ற தேசிய அரசாங்கத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்கின்ற பார்வை எங்களுக்கு இருக்கின்றது. மாற்றம் ஏற்படுவதாக இருந்



துரைராஜசிங்கம் தெரிவிப்பு

தால் அமைச்சரவை மாற்றம் ஏற்படலாம். ஆனால் தேசிய அரசாங்கம் தொடர்ச்சியாக 2020 வரை இருக்கும் என்று நம்புகின்றோம். அது இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.

ஏனெனில் இந்த புதிய அரசாங்கம் அமைந்த போது இந்த நாட்டில் சர்வாதிகாரத்திற்கு எதிரான நிலைமை, மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற நிலைமை, ஜனாதிபதியின் ஏகபோக உரிமைகள் இல்லாமல் செய்கின்ற நிலைமை காணப்படுகிறது.

இப்போது வந்திருக்கின்ற தேர்தல் முடிவு ஒரு சிறிய சலசலப்பாக, நாடாளுமன்றத்திற்கு வெளியே நடைபெற்ற ஒரு சம்பவமாக உள்ளது. இன்னும் சொல்லப் போனால் கூட்டு எதிர்க்கட்சிக்கு உற்சாகம் கொடுத்த ஒரு செய்தியாக இருக்கிற போதிலும்

மஹிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எடுத்த 47 வீதமான வாக்குகளுக்குக் குறைவாக தற்போது 44 வீதமான வாக்குகளையே பெற்றிருக்கின்றார் என்கின்ற செய்தியை ஊடறுத்து உள்நுழைந்து பார்க்கின்ற போது தென்பகுதி மக்கள் அவரது கோரிக்கைக்கு அமோக வரவேற்பைக் கொடுக்கவில்லை.

இதனடிப்படையில் பார்க்கும் போது அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஆதரவை விட குறைந்தளவு ஆதரவு தான் வழங்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

## பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்தவர் நையப்புடைப்பு!

மட்டக்களப்பு,பெப்.19

கொக்கட்டிச்சோலையில் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற இளைஞர்கள் இருவரை அங்கிருந்த இளைஞர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைப்பு செய்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சிறுவியாபாரம்செய்துவரும்பெண்ணொருவரின் வியாபார நிலையத்திற்கு சென்று பொருள்கள் வாங்குவது போன்று நடித்து, பெண் ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்து அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்ற வேளை அவர்களை அப்பிரதேச மக்கள் துரத்திப் பிடித்துள்ளனர் பிடிபட்டவர்களை மக்கள் நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இது தொடர்பில் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்ட விரோதமாகக் கடத்திய தேக்கு மரக்குற்றிகள் மீட்பு

மட்டக்களப்பு,பெப்.19

மட்டக்களப்பு - தொப்பிகல அரசாங்க காட்டில் சட்ட விரோதமாக வெட்டி நுட்பமான முறையில் துவிச்சக்கர வண்டிகளில் கடத்தப்பட்ட ஒரு தொகுதி தேக்கு மரக் குற்றிகளை நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஏறாவூர் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உடலில் எண்ணெய் பூசிய நிலையில் துவிச்சக்கர வண்டிகளை தள்ளிக் கொண்டு வந்த நபர்கள் ஆறு பேரும் சைக்கிள்களை கைவிட்டு பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பியோடி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஆறு துவிச்சக்கர வண்டிகளில் சுமார் ஆறு அடி நீளமுடைய 26 மரக்குற்றிகள் காணப்பட்டன.அத்துடன் கைவிட்டுச்செல்லப்பட்டுள்ள பொருள்களைக்கொண்டு சந்தேக நபர்களைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர். (ப்)

# த.தே.கூட்டமைப்புடன் ஏனைய கட்சிகளை இணைக்கும் முயற்சியில் தமிழர் ஒன்றியம்

கட்சிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைத்துத் தமிழர்களின் ஆட்சி பலம் பெறக் கூடிய வகையில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளை கிழக்கு தமிழர் ஒன்றியம் முன்னெடுத்துள்ளது எனக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான கே.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு நல்லையா வீதியில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சி தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எமது நோக்கம் எமது பிரதேசத்தைத் தமிழர்கள் ஆழ வேண்டும் என்பதே. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்குப் போதுமான அறுதிப் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் தமிழர்கள் ஆட்சி அமைக்க வேண்டுமாக இருந்தால் தமிழ் கட்சிகள் அனைத்தையும் இணைத்து ஆட்சி அமைக்க வேண்டும் என்பதை நாங்கள் தெரியப்படுத்தியிருந்தோம்.

அதற்கு தமிழரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கமிடம் இருந்தது எங்களுக்கு சாதகமான பதில் கிடைத்தது. அதாவது தமிழ்த் தேசியக் கொள்கையளவில் ஒன்றுபட்டிருக்கக் கூடிய கட்சிக ளுடன் நாங்கள் சேர்ந்து ஆட்சி அமைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று அவர் எங்களிடம் தெரிவித்தார்.

இதர தமிழ் கட்சிகளின் கொள்கை ரீதியான விடயங்களை அறிந்துகொள்வதற்காக நாங்கள் அவர்களை நேரடியாகச் சந்திக்க இருக்கின்றோம். அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு ஒத்த கொள்கையுடையவர்களாகக்காணப்படுமிடத்து அவர் களையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைத்து தமிழர் களின் ஆட்சி பலம்பெறக் கூடிய வகையில் ஒற்றுமையை நாங்கள் உறுதிப்படுத்த இருக்கின்றோம்.

வரப்போகும் மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அறுதிப் பெரும்பான்மையாக இந்த மாகாண சபையில் ஆசனங்களைக் கைப் பற்றும் முகமாக கிழக்கு மாகா ணத் தமிழர்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் வந்து ஒரு சின்னத்திற்கு வாக்களித்து பெரும்பான்மை ஆசனங் களைப் பெற்று கிழக்கு மாகாண சபையில் பேரம் பேசுகின்ற சக்தியாக உருவாக வேண்டும் என்பதுதான் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் நோக்கம்.

இதனை அடைவதற்கு நாங்கள் இந்த உள்ளூராட்சித் தேர்தலின் ஒற்றுமையை அடித்தளமாகப் பயன்படுத்துகின்றோம். அதனடிப்படையில் தான் இந்தப் பேச்சு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளருடன் ஏற்படுத்தியிருந்தோம். இது மிகவும் வெற்றி கரமாக இருந்தது என்று தெரிவித்துள்ளார். (ப்)

# ரணில் பக்கம் தாவுகின்றனர் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள்?

கொழும்பு, பெப். 19

உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து, கொழும்பு அரசியலில் ஏற்பட்ட குழப்ப நிலை தற்போது, மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமான திருப்பத்தை எட்டியுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில்விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கம் செய்து விட்டு, கூட்டு எதிரணியின் ஆதரவுடன், நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராகக் கொண்ட அரசை அமைக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி முற்பட்டதால், கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இதற்கான நடவடிக்கைகளை, மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி முன்னெடுத்திருந்தார்.

இதற்கமைய, கூட்டு எதிரணியின் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து பேச்சு நடத்தி, நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையிலான அரசுக்கு ஆதரவு அளிக்க இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, பிரதமரை பதவி நீக்கம் செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து சட்டமா அதிபர் மற்றும் சட்ட நிபுணர்களுடன் தாம் ஆலோசனை நடத்துவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருந்தார்.

எனினும், பிரதமர் தாம் பதவி விலகப் போவதில்லை என்றும், அரசமைப்புக்கு அமைய தமது கடமைகளை முன்னெடுக்கப் போகின்றேன் எனவும் அறிவித்தார்.

இந்த நிலையில், நிமால் சிறிபால டி சில்வாவைப் பிரதமராக நியமிப்பதற்கு ஆதரவு கோரும் கடிதத்தில், போதிய கையெழுத்துக்களைப் பெற முடியாத நிலையில், இந்த முயற்சி பின்னடைவைச் சந்தித்துள்ளது எனக் கூறப்படுகிறது.



பிரதமர் ரணிலுக்கு சாதகமான திருப்பம்

அதேவேளை, பிரதமர்ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவின் உள்மட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்களை தீர்த்து, தமக்கான ஆதரவைஉறுதிப்படுத்துவதில் வெற்றிபெற்றுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதையடுத்து, நேற்று முன்தினம் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகத் தொடர்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆதரவை வெளிப்படுத்தியிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிமால்சிறிபாலடிசில்வாவை பிரதமராகக் கொண்ட அரசாங்கத்தை அமைக்கும் திட்டத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் ஆதரவளிக்கமுன்வராதமையை அடுத்தே, மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்திதற்போதைய அரசைமுன்னெடுக்க இணங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலரும் அமைச்சருமான துமிந்த திசநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர, சரத் அமுனுகம, மஹிந்த சமரசிங்க உள்ளிட்ட அமைச்சர்களே இவ்வாறு எதிர் நிலைப்பாட்டில் உள்ளனர்.

அதேவேளை, தம்மை பிரதமராக ஏற்றுக் கொள்ள இணங்கியுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த துமிந்த திசநாயக்க, மஹிந்த அமரவீர, சரத் அமுனுகம, மஹிந்தசமரசிங்க, மோகன்லால் கிரேரோ உள்ளிட்ட தலைவர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இராப்போசன விருந்து வழங்கப்படவுள்ளது.

இதையடுத்து, தற்போதைய அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கணவன், மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம்

### சம்பவத்தில் ஒருவர் சாவு!

கொழும்பு, பெப். 19

தலங்கம பிரதேசத்தில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தகணவன், மனைவி மீது நேற்று அதிகாலை இனந் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனபொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இருவரும் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கையில் கதவை உடைத்துக் கொண்டு வீட்டில் நுழைந்துள்ள இனந் தெரியாத ஒருவரே இந்த துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## போதைப்பொருள் கடத்திய 27 பேர் மோப்ப நாயின் உதவியுடன் கைது

கொழும்பு, பெப். 19

சிவனொளிபாத மலையை தரிசிப்பதற்காக சென்ற 27 பேரிடம் இருந்து கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் நேற்று முன்தினம் இரவு ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினரால் 'கோரா' என்ற மோப்ப நாயின் உதவியுடன் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிலியந்தலை, கெஸ்பேவ, களுத்துறை, ஹோமாகம மற்றும் கொழும்பு பிரதேசங்களிலிருந்து சிவனொளிபாத மலையை தரிசிப்பதற்காகச் சென்றவர்களிடமிருந்தே மேற்படி கஞ்சா பைக்கட்டுகளும், ஹெரோயின் பைக்கட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை தியகல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வாகனங்களை ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர் திடீரென சோதனை செய்தனர்.

இதன்போது 8 மில்லிகிராம் ஹெரோயினும், 59 ஆயிரத்து 750 மில்லிகிராம் கஞ்சா பைக்கட்களும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து இந்த 27 பேரையும் கைது செய்த ஹற்றன் குற்றத்தடுப்பு விசேட பிரிவினர், ஹற்றன்நீதிவான்முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றனர்என தெரிவித்தனர்.

## 44 ஆவது தேசிய விளையாட்டு விழா நுவரெலியாவில் நேற்று ஆரம்பமானது



கொழும்பு, பெப். 19

விளையாட்டுத்துறை அமைச்சின் 44 ஆவது தேசிய விளையாட்டு விழா நேற்று நுவரெலியா பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

முதலாவது நிகழ்ச்சியாக மரதன் ஓட்டப் போட்டி இடம் பெற்றது.

நுவரெலியா பொலிஸ் விளையாட்டரங்கில் இருந்து நேற்றுக் காலை 6.00 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமானது. தேசிய விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு இணைவாக, மாகாணங்கள் தோறும் இது தொடர்பான பல நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டப் போட்டியில் தேசிய ரீதியில் திறமை காட்டிய 10 வீரர்களும், 6 வீராங்கனைகளும் உட்பட மரதன் ஓட்டப் போட்டியில் 154 பேர் பங்கேற்றனர்.

2018 ஆம் ஆண்டில் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறும் வீர, வீராங்கனைகளுக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி பூட்டானில் ஆரம்பமாகும் முதலாவது தெற்காசிய மரதன் ஓட்டப் போட்டியிலும், அடுத்த மாதம் 25 ஆம் திகதி சீனாவில் இடம்பெறும் போட்டி நிகழ்விலும் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிட்டுமென்று விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## வறட்சி நிலை தோன்றலாம்; திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

நாட்டில் அடுத்து வரும் ஓரிரு மாதங்களில் வறட்சி நிலவக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் மே மாதமளவில் பருவமழை பெய்யும் வரையில் நாட்டில் பெரும் மழை வீழ்ச்சி காணப்படாது என்றும் இதனால் நாட்டில் வறட்சி நிலை தோன்றக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், தற்போதைய வறட்சியான சூழலில் மகாவலி உள்ளிட்ட பல்வேறு நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு குறைந்து வருவதாகவும் விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் மக்கள் தண்ணீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு விவசாயத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

## அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை மார்ச் 5 ஆரம்பம்

அரச முகாமைத்துவ சேவையில் மேலும் ஆறாயிரம்பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன் அடிப்படையில் பரீட்சை மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சையில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றபுள்ளிகள்தற்பொழுது இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மாவட்ட மட்டத்தில் அரச முகாமைத்துவ சேவைக்கு தகுதி பெற்றுள்ளவர்களுக்கான வெட்டுப்புள்ளி இணையத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

தகுதி பெற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர். இதன்போது சான்றிதழ்கள் பரிசோதிக்கப்படும். நேர்முகப்பரீட்சையின் போதுபுள்ளிகள் வழங்கப்படமாட்டா என்று அரச நிர்வாக அமைச்சின் ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகம் திருமதி கே.வி.பி. எம்.ஜே. கமகே தெரிவித்துள்ளார்

வரையறுக்கப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்ற ஆயிரத்து 477 பேரும் பகிரங்க பரீட்சையில் சித்திஎய்தியமூவாயிரத்து 905 பேரும் அரச முகாமைத்துவ சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி அளவில் அரச முகாமைத்துவ சேவையில் நிலவிய அனைத்து வெற்றிடங்களும் இவர்களைக் கொண்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# சைட்டம் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியிடம் குறிப்பாணை கையளிப்பு!

கொழும்பு, பெப்.19

சைட்டம் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கு நாளை சிறப்பு குறிப்பாணை (memo) ஒன்று கையளிக்கப்படவுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு தரப்பினர்களுடன் கடந்த தினத்தில் மேற் கொள்ளப்பட்ட பேச்சுக்களின் இறுதித் தீர்மானத்தின் படி இந்த குறிப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழுவின் உறுப்பினர் மருத்துவ பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

சைட்டம் பிரச்சினை தொடர்பில் எதிர்பார்க்கப்படும் தீர்வு மற்றும் பலவிடயங்கள் இந்தக் குறிப்பாணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் அதன் கீழ் இணைந்துள்ள மாணவ இயக்கங்களும் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு எதிராக மாபெரும் எதிர்ப்பு பேரணியொன்றை நடத்தியிருந்தன.

சைட்டம் என்ற இந்த தனியார் பல்கலைக்கழகத்தை அரசுடைமையாக்கி ஏனைய அரச பல்கலைக்கழகங்க ளைப் போன்று அதனை நடத்துவதற்கும், மருத்துவபீட மாணவர்களுக்கு அங்கு பயிற்சிகளை வழங்கவும் அரசு அறிவித்தது.

எனினும், நல்லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிகள் இது வரை சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டி இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இந்த பேரணிக்கு நீதிமன்றத்தின் ஊடாக பொலிஸார் இடைக்காலத் தடையுத்தரவை பெற்றிருந்த போதிலும் அதனையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடு பட்டனர்.

இதன் காரணமாக ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த மாணவ இயக்கத்தின் இணைப்பாளர் ரயான் ஜயலத் மற்றும் மடுகல்லே பத்தரக்கித்த தேரர் ஆகியோர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டு மென உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் வழக்கு விசாரணையில் அவர்கள் இருவரும் முன்னிலையாகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக பிடி யாணையை பிறப்பிக்கப்பட் டிருந்தது.

இந்த நிலையிலேயே, சைட்டம் பிரச்சினை தொடர்பில் நாளை ஜனாதிபதிக்கு சிறப்பு குறிப்பாணையொன்று

## தினசரி ராசி பலன்
### (19.02.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 7ஆம் நாள் திங்கட்கிழமை சதுர்த்தித்திதி. பி.இ. 5.15 மணி வரை பின்னர் பஞ்சமி நட்சத்திரம். உத்தரட்டாதி பகல் 1.37 மணி வரை பின்னர் ரேவதி. சித்தயோகம் முழுவதும்.*

***ராகுகாலம்** - காலை 7.58 மணி முதல் 9.27 மணி வரை*

***சுபநேரம்** - பகல் 12.28 மணி முதல் 1.57 மணி வரை*

***திவசம் செய்ய வேண்டிய திதி**- மாசி மாத சதுர்த்தி*

***பிறந்த நட்சத்திர வழிபாடு:** உத்தரட்டாதி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவு அதிகரிப்பதால் கடன் பளு ஏறும். குடும்பத்தில் வீண்வாக்கு வாதம் ஏற் படும். தொழிலில் அலைச்சல் அதிகரிக்கும்.

**ரிஷபம்** ஆக்கபூர்வமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். வியா பாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப் படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள்.

**மிதுனம்** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். தொழில் துறை யில் அதிக கவனம் தேவை. வீண் விவாதங்களும் அதிக போட்டியும் இருக்கும்.

**கடகம்** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக் கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வாகன வசதியும் பொறுப்புக்களும் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.

**சிம்மம்** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத்தாம தமாகும். குடும்பத்தில் அமைதி குன்றும். பிள் ளைகளால் கவலை உண்டாகும். தாயாரின் உடல் நிலை பாதிப்படையும்.

**கன்னி** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு மத்திமமாக இருக்கும். உடல் நலம் மனநலம் தளர்ச்சி யடையும். குடும்பத்தில் அதிருப்தி, சலிப்பு உண் டாகும்.

**துலாம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய ஆடம்பரப் பொருள்களை வாங்கி மகிழ் வார்கள்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். செயலில் உத்வேகம் உண்டாகும். புதிய தொழில் தொடங்கும் முயற்சிகள் நன்மை தரும்.

**தனுசு** அதிஷ்டமான நாள். பணம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். நண்பர்கள் உறவினர்களின் உதவிகள் கூடி வரும். சிலருக்கு அரச வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும்.

**மகரம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமா ராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டா கும். தேகசுகம் பாதிப்படையும். மருத்துவச் செலவு கள் உண்டாகும்.

**கும்பம்** யோகமான நாள். பணம் பலவழிகளிலும் வந்து சேரும். தொழில்துறையில் நல்ல ஆதாயமும் அபிவிருத்தியும் உண்டாகும். வீடு, வாகனம் வாங் கும் யோகம் உண்டாகும்.

**மீனம்** அனுகூலமான நாள். எண்ணிய எண்ணம் எல்லாம் மனம் போல் நிறைவேறும். தொழில் செய்யும் பெண்களுக்கு பல விதத்திலும் மேன்மை கிட்டும். குடும்பத்தில் சுப கருமங்கல நிகழ்ச்சிகள் நடக்கும்.

**சந்திராட்டமநாள்:மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை-

**வவுனியா பிரதேசத்தில்**- அட்டம்பஸ்கட கிரா மம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிரா மம், கண்ணாட்டிகணேசபுரம், பொற்கோவில், வண் ணாத்திக்குளம், நெளுக்குளத்திலிருந்து புவரசங் குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிக் குளம் வரை, வேளாங்குளம் இராணுவ முகாம், செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிக்குளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிக்குளம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நெளுக்குளம் தொழி நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், கோவில் குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங் குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரிய கூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம்', புந் தோட்டம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மாணவர்களுக்கான போட்டி

குப்பிளான் தெற்கு – புன்னாலைக் கட்டுவன் அறிவொளி சனசமூக நிலை யத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாணவர்களி டையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே பேச் சுப் போட்டி தரம் 5 முதல் தரம் 7 வரை யான மாணவர்கள் கீழ்ப்பிரிவாகவும் 8 மற்றும் 9 ஆம் தர மாணவர்கள் மத் திய பிரிவாகவும் தரம் 10 மற்றும் 11 ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவாகவும் நடை பெறவுள்ளதுடன் பரதநாட்டியம் மற் றும் கிராமிய நடனம் என்பன திறந்த போட்டியாக மாணவர்களிடையே நடத் தப்படவுள்ளது.

இப்போட்டியில் பேச்சுப் போட்டி எதிர் வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் பரத நாட்டியம் மற் றும் கிராமிய நடனம் என்பன எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிமுதல் மேற்படி சன சமூக நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படு கிறது. (இ)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் தலைமையி இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஆளுநர் றெஜி னோல்ட் குரேயும் சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச கல்வி அலுவலர் எஸ். தேவகுமாரனும் கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ. வெங்கட ரமணா கலந்துகொள்வர். (இ)

★ ★ ★ ★ ★

செம்பியன்பற்று றோ.த.க. பாடசாலை யின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். கணேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச கல்வி அலுவலர் கே.கே.யோகநாதன் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேசக்கல்வி அலுவலர் எஸ்.திரவியராசா ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

★ ★ ★ ★ ★

நீர்வேலி சி.சி.த. பாடசாலையின் புதிய மைதானத் திறப்பு விழாவும் இல்ல மெய் வன்மைப் போட்டியும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் தி. ரவீந்தி ரநாதன் தலைமையில் இடம்பெறும். நிகழ் வுக்கு வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகவும், கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சிவநே சன், வர்த்தகர் க. செவ்வேள், கோப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் ப. இரமண கிருஷ்ணா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வர். (இ)

★ ★ ★ ★ ★

வேலணை மத்திய கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.கிருபாக ரன் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ் வில் கரைச்சி பிரதேச செயலர் த. முகுந்தன் பிரதம விருந்தினராகவும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் சி.அசோக்குமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

# ஆலய உற்சவங்கள்

நயினாதீவு, பெப்.19

நயினாதீவு தம்பகைப் பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து தினங்கள் இடம்பெறும் மஹோற் சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ)

★ ★ ★ ★ ★

பண்டத்தரிப்பு, பெப்.19

மாதகல் நுணாசை கூடல்விளாத்தி சாந்த நாயகி அம்பிகா சமேத சந்திர மௌலீஸ்வர சுவாமி ஆலய மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சமுத்திர மாசிமக தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ)

★ ★ ★ ★ ★

வடமராட்சி, பெப்.19

பொலிகண்டி தியலம்பற்றை வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 28 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் கிரியா பூஷணம் பிரம்மஸ்ரீ பே.ரகுராம் குருக்கள் தலைமையில் நடைபெறும். (இ)

★ ★ ★ ★ ★

உரும்பிராய் வடக்கு நரியன் தோட்டம் மஹாமாரி அம்மன் (பேச்சி அம்மன்) ஆலய வருடாந்த அலகார உற்சவம் நாளை செவ் வாய்க்கிழமை ஆரம்பமாகி பத்து தினங்கள் இடம்பெறும்.

இவ்வாலய அம்மன் ஊர்வலம், கிராம பிரதட்ஷணம் எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (இ)



# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் 100 இலக்கிய அனுபவப் பகிர்வு**

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



## நிறைவில் சிலர் பற்றிய எண்ணங்கள்...

### பேராசிரியர் நந்தி

மருத்துவப் பேராசிரியரான இவர், எம் மேலும் கழகத்தின் மேலும் பெரிய மதிப்பு வைத்திருந்தார். எங்கள் விழாக்களில் பலதரம் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை எங்களோடு முரண்பட்டு, கம்பன் விழாவுக்கு பல்கலைக்கழகத்தார் போகக் கூடாது எனப் பிரசாரம் செய்தபோது அதை நிராகரித்து எங்கள் விழாவுக்கு வந்த கம்பீர மனிதர். எங்கள் விழாவில் இவர் பேசிய இரண்டு பேச்சுக்கள் மறக்க முடியாதவை. பிரசாந்தனின் பேச்சை முதல்முதலில் கேட்டு, அவனைக் ‘‘குட்டி ஜெயராஜ்’’ எனச் சபைக்கு அறிமுகப்படுத்திய பேச்சு ஒன்று. Big Thinking எனும் மேற்கு நாட்டு அறிஞர் ஒருவரது கொள்கையைச் சொல்லி, ஒரு சிலருக்குத் தான் அந்த விரிவு வரும் என்றவர், ராஜராஜசோழனை அதற்கு உதாரணமாய்க் காட்டி, கம்பன் கழகத்தினது முயற்சிகளும் அத்தகைய விரிவு கொண்டவை எனப் பாராட்டினார். ‘‘மகர யாழ் விருதுக்கு பத்தாயிரம் கொடுத்தாலும், வாங்குகிறவர்கள் மகிழ்ந்திருப்பார்கள். இந்த கஷ்டமான சூழ்நிலையில் ரூபா ஒரு லட்சம் கொடுக்கும் கம்பன் கழகத்தினது செயற்பாடு, மேற்கூறிய விரிந்த செயற்பாடே’’ என்று பாராட்டிய பேச்சு மற்றொன்று. அவர் மேல் பெரிய மதிப்பு வைத்திருந்தேன். புலிகளுடனான எங்களது முரண்பாடு முற்றியிருந்தபோது ஒருநாள், என்னைச் சந்தித்த அவர், ‘‘ஜசே! அவங்களுக்கு கம்பனைத்தானே பிடிக்கேல. நீங்கள் ஒண்டு செய்யுங்கோ! கொஞ்ச நாளைக்கு கம்பன் கழகத்திட பேர, பாரதி கழகம் எண்டு மாத்திவிடுங்கோவன்’’ என்றார். எனக்கு சப்பென்று போயிற்று.

★ ★ ★

### பண்டிதர் வீரகத்தி

இவர் பெரும் இலக்கணப் புலமையாளர். மற்றவர்களைக் கிண்டல் செய்வதில் மன்னர். தன்னை ஒரு முற்போக்காளராய்க் காட்டிக் கொள்வார். மற்றைத் தமிழ் பண்டிதர்கள் போல, பிற்போக்கு எண்ணங்கள் அதிகம் இல்லாதவர். தன் வாழ்விலும் அக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். அவர் வாயில் எந்த நேரமும் சிகரெட் இருக்கும். ரகுபரனால் இவரது தொடர்பு கழகத்திற்குக் கிடைத்தது. என்மேல் பெரிய மதிப்பு வைத்திருந்தார். எங்களோடு நெருங்கிப் பழகினார். ஊரெழுவில் நடக்கும் எனது பேச்சுகளையெல்லாம் வந்து கேட்பார். பேச்சின் முடிவில் அவர் சொல்லும் விமர்சனங்கள், என்னைப் பெரும்பாலும் சங்கடப்படுத்தும். அவர், இரசிப்பதாய்ச் சொல்லும் இடங்கள், உயர்வான இடங்களாய் இராது. எங்கள் கழகத்தைச் சேர்ந்த நண்பன் தணிகாசலம், தமிழ் மேல் கொண்ட அன்பால், அவருக்குப் பெருந்தொண்டு செய்வான். அவன் கஷ்டம் கருதாது, அவனை சைக்கிள் ஓட்டுவித்து, எங்கெங்கெல்லாமோ செல்வார்.

அவனைக் கொண்டு நிறைய வேலை வாங்குவார். அவனில்லாத நேரத்தில் அவனைத் தாழ்த்திப் பேசுவார். அவரது அந்தப் போக்கால் மிகவும் சங்கடப்படுவேன். ஒருமுறை எனது குருநாதர் யாழ். வந்திருந்தார். விழா மேடையை விட்டு அவர் பேசியிறங்கும்போது, அருகில் சென்ற பண்டிதர் தனது மகளுக்கு இந்தியாவில் படிக்க, ‘அட்மிஷன்’ வாங்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். குருநாதரும் சம்பிரதாயமாய் ‘‘அதற்கென்ன வாருங்கள், பார்க்கலாம்!’’ என்று சொல்லிச் சென்றார். அவரது அந்த வார்த்தையை உறுதியாய் எடுத்துக் கொண்டு, பண்டிதர் தனது மகளையும் அழைத்துக் கொண்டு திருச்சி சென்றுவிட்டார். அங்கு சென்று அவர், குருநாதருக்குக் கொடுத்த தொல்லைகள் ஏராளம். எங்களுக்காக அவரை ஹோட்டலில் தங்க வைத்தாராம். மதிய உணவு கூட குருநாதர் வீட்டிலிருந்து வருமாம். அதில் குறைகள் சொல்லி, சில வேளை பண்டிதரும் மகளும் நிராகரிப்பார்களாம். அதேபோல, எடுத்துக் கொடுக்கப்பட்ட கல்லூரி அட்மிஷன்களையும், அது சரியில்லை, இது சரியில்லை என்று, மகளின் விருப்பத்திற்கேற்ப பண்டிதர் தட்டிக்கழிப்பாராம். புதுக்கோட்டையில் தனது நண்பரான, ஒரு புடைவைக் கடை முதலாளியை அட்மிஷனுக்காகச் சந்திக்க, குருநாதர் அழைத்துச் சென்றாராம். அங்கு குருநாதரும் அந்த முதலாளியும் அமர்ந்திருக்க, கால் மேல் கால்போட்டு, பண்டிதர் சிகரெட் பிடிக்கத் தொடங்கினாராம். இவற்றையெல்லாம் பின் மாது சொல்ல அறிந்து கொண்டேன். இப்படிப் பல துன்பங்களைக் கொடுத்துவிட்டு, இறுதியில் அட்மிஷன் எடுக்காமல் அவர்கள் இலங்கை வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்ததும் எனது குருநாதர் அட்மிஷன் எடுத்துத்தரவில்லை என்று, பலரிடமும் பண்டிதர் குறை சொல்லித் திரிந்ததை அறிந்து வருந்தினேன். அது போலவே, எங்கள் கம்பன் கோட்டம் நிறைவுறாது இருந்த வேளையில், அதை தானும் மகளும் தங்கியிருக்கத் தரும்படி, எம்மை அவசரப்படுத்திப் பெற்றுக் கொண்டார். பின்னர், அது மகளுக்குப் பிடிக்கவில்லையென்று, கட்டடத்தில் பல குறைகளைச் சொல்லி விட்டுச் சென்றார். பண்டிதர் நல்லவர் தான் ஆனாலும், பிள்ளைப் பாசம் அவரது பலவீனமாய் இருந்தது. இவரது தொடர்பும் எம்மால் மறக்க முடியாதது.

★ ★ ★

### சிவமகாராஜா

மிகுந்த அமைதியும், அடக்கமும், செயல் திறனும் உள்ளவர் இவர். ஆரம்பத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவர் எங்கள் கழகத்தின் மேல் பெருமதிப்பு வைத்திருந்தார். எங்களது விழாக்கள் அனைத்திலும் நிச்சயமாக பிரசன்னமாகியிருப்பார். தன்னால் முடிந்த அளவு கழகத்திற்கு நிதி உதவியும் செய்துவந்தார். கம்பன் கோட்டம் கட்டியபோது, தனது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் சிமெந்து பைக்கற்றுக்கள் பலவற்றைத் தந்து எங்களுக்குத் துணை புரிந்தார். தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் கடும் பக்தர். கடைசிவரை அவர் எங்கள்மேல் கொண்ட அன்பு நிலைத்திருந்தது. பிற்காலத்தில் போராளிகளால் சுடப்பட்டு இறந்தார்.

★ ★ ★

### பேராசிரியர் க.நாகேஸ்வரன்

இவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலந்தொட்டு இவரை நான் அறிவேன். தமிழ் மேல் எல்லையற்ற பிரியம் கொண்டவர். பேச்சாற்றல் உடையவர். தமிழின் எல்லாத் துறைகளிலும் உள்நுழைய முயல்பவர். வெகுளியான மனம் கொண்டவர். பலகாலம் பல்கலைக்கழகத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்டார். பின்னர் சப்ரகமுவப் பல்கலைக் கழகத்தில் நிரந்தர விரிவுரையாளர் ஆனார். நிறையப் படித்திருந்தும் ஒருமுகப்படாத இவரது தன்மையால், இவரது பேச்சுக்கள் வரைவின்றி இருக்கும். எனது தனிப்பட்ட பட்டிமண்டபங்களிலும், கழகப் பட்டிமண்டபங்களிலும் கலந்து சிறப்பித்தவர். மற்றவர்களை நேசிக்கவும், தூசிக்கவும் தயங்காதவர். அண்மைக்காலமாக கழகத்தில் ஊடலோடு இருக்கிறார்.

★ ★ ★

### பேராசிரியர் சிவலிங்கராஜா

எங்களோடு நெருக்கமானவர் இவரும் பல்கலைக்கழத்தில் படிக்கும் போதே எனக்கு அறிமுகமாகியிருந்தார். தமிழ் மேல் விருப்புக் கொண்டவர். விதி, இவரை எங்கெல்லாமோ கொண்டு சென்று, இறுதியில் தமிழ்த் துறையில் இறக்கியது. மரபுத்தமிழ் தான் இவரது பலம். ஆனால், கைலாசபதி, சிவத்தம்பி காலத்தின் வீச்சால், தன்னை நவீன தமிழ் அறிஞராய்க் காட்ட முயன்றார். அதனால் ஒருமித்த கொள்கையில் இவரால் தொடர்ந்து நிற்க முடியவில்லை. ஆழ் மனதில் எங்களை நேசித்தார். ஆனால், இவரது புறமனது கழகத்தை ஏனோ வெறுக்கவும் செய்தது. இவர் தமிழ்த் துறைத் தலைவராய் இருந்த பொழுது, ஆற்றல் உள்ள கழக இளைஞர்களை அங்கீகரிக்கத் தவறினார்.பலதரம் இவரோடு நான் முரண்பட்டிருக்கிறேன். ஆனாலும் எங்கள் இருவருக்கும் இடையிலான நேசம் நிஜமானதே. வஞ்சனை இல்லா மனதுடையவர். அதனால் இவரது எச்சங்கள் ஏற்றங்கொண்டன. இவரது ஒரே மகன் தந்தையைத் தாண்டி என்னை நேசிப்பவன்.

★ ★ ★

### பேராசிரியர் இ.பாலசுந்தரம்

பல்கலைக்கழகத்தாருள் என்னை மதித்து நேசித்தவர் இவர். கழகத்தின் பல விழாக்களிலும் கலந்து கொண்டார். எங்களோடு புதுவை விழாவுக்கு இரண்டு தரம் வந்திருக்கிறார். என்னைக் காணும் போதெல்லாம், நானே சங்கடப்படும் அளவிற்கு மரியாதைதருவார். இப்பொழுது அவரது வாழ்க்கை கனடாவில்.

★ ★ ★

### சர்வோதயம் திருநாவுக்கரசு

சர்வோதயத்தின் மூலம் பெரும் தொண்டாற்றி வந்த மனிதர் இவர். சுயமும் ஆளுமையும் செயல்திறனும் தொண்டு மனப்பான்மையும் கொண்டு அக்காலத்தில் அற்புதமாய்ப் பணியாற்றி வந்தார். அழகுணர்ச்சி மிக்கவர். நல்லூர்த்திருவிழாவிற்கென இவர் போடும் அழகான தண்ணீர்ப் பந்தலைப் பார்க்கவே மக்கள் கூடுவார்கள். எவருக்கும் அஞ்சாமல் தன் வழி நடந்த மனிதர். எங்கள் கழகத்தின் மேல் பெரும் மதிப்புக் கொண்டிருந்தார். எங்கள் விழா ஊர்வலத்தில் தனது சர்வோதயத் தொண்டர்களை சீருடையில் கலக்கச் செய்து விழாக்களைப் பெருமைப்படுத்தினார். எங்கள் விழாக்களில் கலந்துகொள்ளும் அன்பர்களுக்கு பலதரம் உணவிட்டார். எங்கள் விழா நிகழ்ச்சிகளிலும் கலந்து உரையாற்றி இருக்கிறார்.

★ ★ ★

(தொடரும்...)

# பரபரப்பான சூழலில் இன்று சபை கூடுகின்றது

கொழும்பு, பெப். 19

பிரதமர் பதவி நீக்கம், தனியாட்சி போன்ற அரசியல் பரபரப்பான சூழலில் இன்று நாடாளுமன்றம் கூடுகின்றது.

இதன்போது பிரதான அரசியல் கட்சிகள் தமது பெரும்பான்மைப் பலத்தைநிரூபிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. சில வேளைகளில் கட்சி தாவல்கள் இடம்பெறக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்காரணமாக சர்ச்சையான நிலைமை இன்று நாடாளுமன்றத்தில் ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளது.

மேலும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விவாதம் நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பெறுபேறுகள் வெளிவந்த பின்னர் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும் பிளவடைந்துள்ளன. இதனால், கடந்த வாரம் முழுவதும் அரசியல் ரீதியாக நாடு பரபரப்பாக இயங்கியமை காண முடிந்தது.



இதன்படி ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் தனி ஆட்சி அமைப்பதாகக் கூறி விட்டு பின்னர் தேசிய அரசுடன் ஒன்றிணைந்து பயணிப்பதாக அறிவித்தது. அதனையடுத்து தற்போது கூட்டு எதிர்க்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து தனித்து ஆட்சி அமைக்கவுள்ளதாகக் கூறி வருகின்றன.

அத்துடன், பிரதமர் பதவியிலும் சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினரே பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தம் பிரயோகித்த போதிலும் தற்போது நான் பிரதமர் பதவியில் இருந்து விலக மாட்டேன் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அத்துடன், சஜித் பிரேமதாஸவும் கரு ஜயசூரியவும் பிரதமர் பதவி பொறுப்பை ஏற்க மறுப்பு தெரிவித்துள்ளனர்.இவ்வாறு அரசியல் ரீதியாக பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ள தருணத் தில் இன்று நாடாளுமன்றம் கூட வுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பின்னர் கூடும் முதலாவது நாடாளுமன்ற அமர்வாக இதனை கருத முடியும்.

## அரச நாடக விழா அமைப்பு முறையில் மாற்றங்கள்!

கொழும்பு, பெப். 19

அரச நாடக விழா மார்ச் மாதம் 27ஆம் திகதி கொழும்பு நெலும்பொக்குன கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

உலக நாடக தினத்தை அடிப்படையாகக் கொண்டு இம் முறை அரச நாடக விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல தெரிவித்தார்.

இம்முறை நாடக விழா 46 ஆவது தடவையாக இடம் பெறுகிறது. நாடக விழாவிற்கான இறுதிச் சுற்று நாடகங்கள் டவர் மண்டபத்தில் ஆரம்பமாகின. இந்த இறுதிச்சுற்று நாடகங்கள் அடுத்த மாதம் 26 ஆம் திகதி வரை மேடையேற்றப்படும்.



இவற்றில் தெரிவு செய்யப்படும் சிறந்த நாடகங்களுக்கு அரச நாடக விழாவில் விருதுகள் வழங்கப்படும். அடுத்தக் கட்டம் முதல் அரச நாடக விழா அமைப்பு முறையில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று திருமதி அனுஷா கோகுல மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 19

பண்டாரகம, ரைகம பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில் ேங்ர்க்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை தெற்கு பிரதேச பொலிஸ் நிலையத்தின் அத்தியட்சகரான இந்த அதிகாரி, நேற்று முன்தினம் தனது கடமைக்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது மூன்று பேர் அவர் மீது திடீரென தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். இதில் அந்த அதிகாரி நிலைகுலைந்துள்ளார். இதனையடுத்து அந்த மூவரும் தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த நிலையில் அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் மூவரும் பின்னர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் மூவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.



# கழுத்தை அறுக்கும் காணொலியை வெளியிட்டவரின் முகநூல் முடக்கம்!

கொழும்பு, பெப். 19

இலங்கையின் சுதந்திர தினத்தன்று லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கழுத்தை அறுப்பது போன்று இராணுவ உயர் அதிகாரியொருவர் வெளிப்படுத்திய சைகையை காணொலியாக வெளியிட்டவரின் முகநூல் முடக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தின வைபவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் உள்ள இலங்கையின் தூதரக அலுவலகத்திற்கு முன்பாக புலம் பெயர் தமிழர்கள் கடந்த நான்காம் திகதி ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தியிருந்தனர்.

அப்போது, இலங்கைத் தூதரக அலுவலகத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரியான கொமாண்டர் பிரியங்க பெர்னாண்டோ ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களை பார்த்து கழுத்தை அறுப்பது போல சைகை காண்பித்தார்.

அத்துடன், தனது இராணுவச்சீருடையின் தோள்பட்டையில் இருந்த இலங்கையின் தேசிய சின்னத்தையும் சுட்டிக் காண்பித்திருந்தார்.

அதனை காணொலியாக பதிவு செய்த ஈழம் ரஞ்சன் எனப்படும் தனபாலசிங்கம் சிவறஞ்சன் என்பவர் தனது முகநூலில் உடனடியாக அதனை பதிவேற்றம் செய்தார்.

அந்த காணொலியை பிரதி செய்த மேலும் பலர் தமது முகநூல்களிலும் பகிர்ந்திருந்ததுடன், தொலைக்காட்சிகளும் அதனை செய்தியாக ஒளிபரப்பியிருந்தன, செய்தி இணையத்தளங்களும் பத்திரிகைகளும், அந்த காணொலியை அடிப்படையாகக் கொண்டு செய்திகளை வெளியிட்டிருந்தன.



இதனால், இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன் பிரித்தானிய, இலங்கை அரசுகளின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டன.

இதனையடுத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்த பாதுகாப்பு உயர் அதிகாரியை தற்காலிகமாக சேவையில் இருந்தும் இடைநிறுத்தியிருந்தது.

ஆனாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த அதிகாரியை உடனடியாக மீண்டும் பணியில் அமர்த்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதனிடையே கழுத்தை அறுப்பதாக சைகை காண்பித்ததன் மூலம் உயிர் அச்சுறுத்தலை இலங்கை இராணுவ உயர் அதிகாரி விடுத்தார் எனவும் அவரின் இராஜதந்திர அந்தஸ்தை மீளப் பெற்று, நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என பிரித்தானியா தொழில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில்இராணுவ உயர் அதிகாரி பிரியங்க பெர்னாண்டோ கழுத்தை அறுப்பது போன்று சைகை மூலம் காண்பித்ததை காணொலியாக பதிவு செய்து முகநூலில் வெளியிட்டவரின் விவரங்களைலண்டனில்உள்ள இலங்கை தூதரக அலுவலக அதிகாரிகள் தேட ஆரம்பித்தனர்.

பிரியங்க பெர்னாண்டோவின் செயற்பாட்டை நியாயப்படுத்தி, சிங்கள முகநூல் பாவனையாளர்களும் தமது கருத்துக்களை பதிவிட்டிருந்தமையுடன் இலங்கை அரசின் முக்கிய அமைச்சர்களும் பிரியங்க பெர்னாண்டோவிற்கு தமது ஆதரவை வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன பிரியங்க பெர்னாண்டோவின் செயற்பாட்டை பாராட்டிய அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமோர் அமைச்சரான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் நவீன் திஸாநாயக்க ஆகியோர் அவருக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இந்த பின்புலத்தில் ஜொலி மல்லி என்பவரின் முகநூல் பக்கத்தில் ஈழம் ரஞ்சன் புலிகளின் ஆதரவாளர் எனவும் அவரின் முகநூல் பக்கத்தை உடனடியாக தடை செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

அந்த ஈழம் ரஞ்சனின் முகநூல் பக்கத்தை எவ்வாறு தடை செய்ய முடியும் என்பது குறித்த வழிகாட்டல்களும் ஜொலி மல்லி என்ற சிங்கள மொழிமூலமான முகநூல் பக்கத்தில் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு அமைவாக முகநூல் நிர்வாகத்தினால், ஈழம் ரஞ்சன் என்பவரின் முகநூல் பக்கத்தில் நிழல் படங்கள் மற்றும் காணொலிகள் பதிவேற்றம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

## பொலிஸ் பயத்தில் ஓடையில் குதித்து உயிரை விட்ட இளைஞர்!

கொழும்பு, பெப். 19

பிலியந்தலையில் நீரோடையில் குதித்து உயிரிழந்த வாலிபரின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பிலியந்தலை, கஹதுடுவையில் ஹெரலியவலை பகுதியில் போதை மருந்து பாவனை மற்றும் விநியோகம் இருப்பதாகச் சந்தேகித்த பொலிஸார், அங்கு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, இரண்டு கிராம் ஹெரோயினைக் கைவசம் வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

அப்போது, மற்றொரு இளைஞரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட பொலிஸார், அவரை விசாரிக்க முயற்சி செய்தனர்.

தன்னை நோக்கி பொலிஸ் உத்தியோகத்தர்கள் வருவதைக் கண்டு அச்சம் அடைந்த அந்த இளைஞர் ஓடிச்சென்றுஅருகில்இருந்த நீரோடை ஒன்றினுள் குதித்தார்.

எனினும், உடனடியாக அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதையடுத்து, அந்த இளைஞன் மரணித்திருக்கலாம் என்றும் அதற்கு பொலிஸாரின் நடவடிக்கையே காரணம் என்றும் அப்பகுதிவாசிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை ஏழு மணியளவில், இந்த இளைஞரின் உயிரற்ற உடல் நீரோடையில் மிதந்துகொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

PEOPLE'S BANK

## தங்க நகை ஏல விற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2016 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 17.03.2018 (சனிக்கிழமை), 18.03.2018 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீள எடுப்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை<br>யாழ். பிரதான வீதி<br>ஊர்காவற்றுறை<br>நெல்லியடி<br>அச்சுவேலி<br>சங்கானை | மல்லாகம்<br>உரும்பிராய்<br>----<br>----<br>புத்தூர்<br>பண்டத்தரிப்பு | | 17.03.2018 (சனிக்கிழமை)<br>18.03.2018 (ஞாயிற்றுக் கிழமை) |
| சுன்னாகம் | கோப்பாய் அளவெட்டி | 16.03.2018 | |
| சாவகச்சேரி | கைதடி | | யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி<br>பருத்தித்துறை<br>கொடிகாமம் | இணுவில்<br>புலோலி<br>---- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

தொ.பே.இல.
021- 222 2601 / 021 222 8602
தொலைநகல்: 021 -222 2602
ஈமெயில்:
Jafrho @ peoplesbank.lk

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வட்டாரம் - 19, காமால் ஒழுங்கை, ஆதன இல 16/14 என்ற ஆதனம் சேகுமதர் பெண் பது நாச்சியா என்னும் பெயரில் யாழ். மாநகர சபையின் பதிவேட்டில் காணப்படுகின்றது.

இல,12, காமால் ஒழுங்கை முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகவும், கொழும்பு வீதி இரத்மல்யாய, புத்தளத்தில் தற்போது வசிப்பவருமான மொஹமட் சுல்தான் தையாரும் பெண் நைனா மொஹமட் சித்தி ரசீனாவும், பிரசித்த நொத்தாரிசு M.M.M. றமீஸ் முகதாவில் 2003.03.30 ஆம் திகதியிட்டு 217 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரகடன உறுதியில் குறித்த ஆதனம் பிச்சை கரீம் நைனா முகமட் மற்றும் அவரது பிள்ளைகள் நைனா மொஹமட் அமீர், நைனா மொஹமட் ரசீன், நைனா மொஹமட் பஷீர், நைனா மொஹமட் ஷைபுன் நிசா ஆகியோரை அவர்களது மாதா வழி முதுசமாக வந்தடைந்ததாகவும் அவர்கள் குறித்த ஆதனத்தை M.M. மன்சூர் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதி மூலம் தமக்கு வழங்கினார்கள். என்றும் 1990 ஆம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது குறித்த உறுதி தொலைந்து விட்டதாகவும், வெளிப்படுத்தியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு அ. இராஜரட்ணம் முகதாவில் 2004.01.10 ஆம் திகதியிட்ட 1978 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த முகமட் சுல்தான் தையாரும் பெண் நைனா மொஹமட் சித்தி ரசீனாவும் குறித்த ஆதனத்தை 37/2, நாவலர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை செபமாலைதாசனுக்கு அறுதியாக விற்றுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு அ. இராஜரட்ணம் முகதாவில் 2005.06.01ஆம் திகதியிட்டு 3080 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் மேற்படி விலாசத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை செபமாலைதாசனும் பெண் சத்தியபவாணியும் காரைநகர் தோப்புக்காடு வேலும் மயிலும் ரகுணதாசனும் பெண் சுபோதினியும் அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன விபரம் :- வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்ணை கோவிப்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சுப்பிரமணியம் அவர்களால் 2011.07.20 ஆம் திகதி 1858 இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட துண்டு - 1எனச் சுட்டப்பட்ட நில.பர.00 குளி 9.40 ஆகும். இதற்கு எல்லை,

கிழக்கும் வடக்கும் :- சுல்தான் அப்துல் காதரின் ஆதனம்
மேற்கு :- காமால் ஒழுங்கை
தெற்கு :- எம்.எஸ்.செய்யதின் ஆதனம்

தற்போது வேலும் மயிலும் ரகுணதாசனும் பெண் சுபோதினியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்த மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வேலும் மயிலும் ரகுணதாசனும் பெண் சுபோதினியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது இல :- காமால் ஒழுங்கை
மாநகர சபை , யாழ்ப்பாணம்
15.02.2018

ஆணையாளர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்களை கௌரவிக்கும் மாவட்ட ரீதியான வைபவங்கள்

## - இன்று முல்லைத்தீவில், நாளை கிளிநொச்சியில் -

யாழ்ப்பாணம்,பெப்.19

வட மாகாணத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபட்டு வரும் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் மாவட்ட ரீதியான வைபவங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள், பண்ணையாளர்களில் சிறப்பான முறையில் குறைந்த செலவில் கூடிய உற்பத்தியினை மேற்கொள்ளும் விவசாயிகள், பண்ணையாளர்களில் இவ் வைபவத்தில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையை வட மாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் –

வடமாகாணத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கு முகமாகவும் குறைந்த உற்பத்தி செலவுடன் அதிகளவு பயனை தரக்கூடிய வித்தில் தங்களின் துறைகளில் வெற்றிகரமான முறையில் உற்பத்தியினை மேற்கொள்ளும் சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் மாவட்ட ரீதியாக ஐந்து மாவட்டங்களிலும் போட்டிகள் நடைபெற்று வைபவங்கள் மாவட்ட ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகள் நான்கு வகைகளின் கீழ் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு வகையிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**வகை** I – சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்.

**வகை** II– சிறந்த சேதன விவசாய செய்கையாளர்.

**வகை** III–மாவட்டத்துக்குப் பொருத்தமான துறையின் கீழ் விவசாயிகள் தெரிவு செய்யப்படுவர்.

**மாவட்டம் - யாழ்ப்பாணம்**

**வகை** III – சிறந்த தேனி வளர்ப்பாளர்கள்.

**வகை**IV – சிறந்த ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்துடன் மிளகாய் செய்கையாளர்.

**மாவட்டம் - கிளிநொச்சி**

**வகை** III–சிறந்த அன்னாசி செய்கையாளர்

**வகை**IV – சிறந்த நிலக்கடலை செய்கையாளர்

**மாவட்டம் - முல்லைத்தீவு**

**வகை** III – தூவல் நீர்ப்பாசனத்தின் கீழான சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்.

**வகை** IV – சிறந்த பயிர் மாற்றீட்டுத் திட்டச் செய்கையாளர்.

**மாவட்டம் - மன்னார்**

**வகை** III– சிறந்த மறுவயற் செய்கையாளர்

**வகை**IV– சிறந்த வாழைச் செய்கையாளர்

**முல்லைத்தீவில்**

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சிறந்த விவசாயிகளையும், சிறந்த பண்ணையாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முல்லை சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் வடக்கு விவசாய அமைச்சர் க. சிவநேசன் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் மாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், அ.லெ.ஜ.ஜவாஹிர் மற்றும் முல்லைத்தீவு செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சி மாவட்ட சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு, கிளிநொச்சி ஏ9 வீதி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாண விவசாயம், கால்நடை அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மாகாண சபை உறுப்பினர்கள் த.குருகுலராஜா, ப.அரியரட்ணம், சு.பசுபதிப்பிள்ளை, வை.தவநாதன் மற்றும் மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## மோ. சைக்கிளில் சென்று நகைகளை சூறையாடி வந்த ஆசாமி கைது!



கொழும்பு, பெப். 19

நாட்டின் பல பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள் மூலம் பயணித்து தங்க நகைகளை கொள்ளையடித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரை காலி நகரில் வைத்து திக்வெல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி நகரில் தங்க மாலை ஒன்றை கொள்ளையடித்துள்ள சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டிற்கமய, திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் 27 வயதான இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக அக்மீமன, பொத்தல, காலி, உடுகம, கண்டி, நுகேகொடை, எல்பிடிய, மாத்தறை மற்றும் களுத்துறை உட்பட பல பிரதேசங்களில் குற்ற வியல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதான இந்த நபர் கொள்ளையடித்த தங்க நகைகளை காலி பிரதேச வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் கட்டுக்கரைக்குளத்தில்

# நீர் வற்றி வருகிறது: மழையும் இல்லை!

## விவசாயிகள் கவலை

மன்னார் மாவட்டத்தில் மழை பொய்த்து வருவதாலும் அங்குள்ள பகுதியில் பிரதான குளமாகிய கட்டுக்கரைக் குளத்தில் நீர் இன்மையாலும் செய்கை பண்ணப்பட்ட விவசாயம் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கட்டுக்கரைக் குள விவசாயிகள் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.சில்வா தெரிவித்தவை வருமாறு:–

மன்னார் மாவட்டத்தில் நடப்பு வருட 2017/2018 காலபோக விவசாய நெற்செய்கையில் 30ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதி விவசாயிகள் வான் நம்பியும் கட்டுக்கரைக்குளத்தை நம்பியுமே காலப்போக நெற் செய்கையை மேற்கொண்டு வருகின்றபோதும் இவ் வருடமும் பருவ மழை பொய்த்தமையால் இப் பகுதியில் பெரும்பாலான நெற்செய்கை அழியும் நிலைக்கு உருவாகியுள்ளது.

மன்னார் கட்டுக்கரைக் குளத்தை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகளின் பயிர்களுக்கு கட்டுக் கரைக் குளத்திலிருந்து பத்து துருசுகளுக்கூடாக நீர் பாய்கின்றபோதும் கட்டுக் கரைக்குளத்தில் நீர் இன்மையால் தற்பொழுது இரண்டு துருசுக்கூடாக வேவிவசாயத்துக்கு நீர் பாய்கின்றது.

இதனால் செய்கைப்பண்ணப்பட்ட 20 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் நீர் இன்மையால் அழிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஏனைய பயிர்களுக்கு குழாய் கிணறுகள் வைத்திருப்பவர்கள் அதிலிருந்து நீர் பாய்ச்சுவதற்கான நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றனர்.– என்றார்.

இதேவேளை, குருவில் பகுதியில் சுமார் 2000 ஏக்கரில் செய்கைப் பண்ணப்பட்ட விவசாயம் பாதிப்படையாதிருக்க அங்கு அமைக்கப்பட்டுள்ள மூன்று குழாய் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சுவதற் காக நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் மோகன்ராஜா எரிபொருளுக்காகஐந்துலட்சம்ரூபா நிதியை வழங்கியிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இசைமாலைத்தாழ்வு, முருங்கன் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயத்துக்கு அருவியாற்றிலிருந்து கட்டுக்கரைக்குளத்து பிரதான வாய்க்கால் மூலம் ஐந்து அங்குலத்தில் வரும் நீரை இடைமறித்து 13ம் கட்டை வாய்க்கால் ஊடாக இவ் விவசாயிகளுக்கு ஐந்து நாளைக்கு ஒரு முறை சுழற்சி மூலம் நீர் பகிர்ந் தளிக்கப்பட்டு வருகின்றது என மன்னார் கட்டுக் கரைக்குள விவசாயிகளின் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.சில்வா தெரிவித்தார்.

அத்துடன் அடைக்கலமோட்டை வாய்க்கால் ஊடாக நீர் வருவது தடைப்பட்டுள்ளதால் கீழ்குளம், ஆளங்குளம், பாப்பாக்குளம், ஞானியயாக்குளம், துவரக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயம் அழிந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என பாப்பாங் குளம் விவசாய அமைப்பின் தலைவர் ஏ.கிறிஸ்ரி பீரிஸ் தெரிவித்தார்.

(இ–112)

## நினைவு நிகழ்வில் நாளை சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.19

எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "பு.சத்தியமூர்த்தி – நினைவுகளுடன் பேசுதல்" எனும் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் இணுவையூர்சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும்.

'நினைவுகளைப் பேசுதல்' எனும் தலைப்பில் ஊடகவியலாளர் இளங்கீரனும், 'காலத்தைப் பேசுதல்' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் உரை நிகழ்த்துவர். (இ)

## அனைத்துப் பொலிஸாரின் செயற்பாடுகளை மேம்படுத்த மக்களின் கருத்துக்கள்!

கொழும்பு, பெப். 19

பொலிஸாரின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு மக்களின் கருத்துக்களை அறியும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையக ஆணைக் குழுவினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் மக்களின் கருத்தறியும் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

## கிராம உத்தியோகத்தருக்கு அலுவலகங்கள்!

கொழும்பு, பெப்.19

கிராம உத்தியோகத்தர்களுக்காக 14 ஆயிரம் உத்தியோகபூர்வ சேவை அலுவலகங்களை அமைக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

இதுவரை ஆயிரம் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக 200 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. கிராம உத்தியோகத்தர்களின் கடமைகளை ஒழுங்குபடுத்தி மக்களுக்கு கூடுதலான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது இதன் நோக்கமாகும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

வினாத்தாள் 14 பகுதி II இன் தொடர்ச்சி...

28) காலை 8.10 இற்கு வீட்டிலிருந்து சந்தைக்கு சென்ற அம்மா மாலை 12.40 இற்கு வீட்டிற்கு வந்தார்.
   1. அம்மா வீட்டிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலயக் கடிகாரத்தில காட்டும் விதத்தை எழுதுக. ...................................................

29) பண்ணையொன்றிலுள்ள கோழிகளில் ¾ ஐ விற்ற பின்னர் 10 கோழிகள் எஞ்சியிருந்தன. ஆரம்பத்தில் பண்ணையிலிருந்த கோழிகள் எத்தனை? ....................................

30) கடையொன்றில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலின் ஒரு பகுதி கிழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சீனி 1Kg | ரூ 90.00 |
| தேயிலை 1Kg | ரூ 465.00 |
| பருப்பு 1Kg | ரூ 160.00 |
| அரிசி 1Kg | ரூ 70.00 |

விலைப்பட்டியலை வாசித்து விடை தருக.

1. அம்மா 1Kg 500g சீனியும் 250g பருப்பும் வாங்கினார். அவர் வியாபாரிக்குக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு? .............................
2. 1Kg 500g பருப்பை வாங்கிய மேரி ரூபாய் 300.00 ஐக் கடைக்காரரிடம் கொடுத்தாள். அவளுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? .......................................
3. 1Kg தேயிலையும் 1Kg அரிசியும் வாங்குவதற்கு முரளியிடம் ரூபாய் 500.00 இருந்தது. அவனுக்கு மேலும் எவ்வளவு தேவை? .....................................
4. அரிசி 1Kg 500g இன் விலை யாது? ...............................................

31 தொடக்கம் 60 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

31) வருடத்தின் எல்லாக் காலங்களிலும் பூக்கக்கூடிய பூவினம்
   1. மேமலர் 2. முள்முருங்கை 3. அலரி

32) இரும்புச்சத்து குறைபாட்டால் ஏற்படக்கூடிய நோய்
   1. நீரிழிவு 2. குருதிச்சோகை 3. கண்டமாலை

33) நீரில் வாழும் தாவரம்
   1. ஐதரில்லா 2. பன்னம் 3. அரிசி

34) புத்தகங்களுக்கு பெருமளவு சேதத்தை ஏற்படுத்துவன
   1. இராமபாணம், கரப்பான் 2. இராமபாணம், கறையான் 3. கறையான், நுளம்பு

35) இலங்கைக்கேயுரிய முலையூட்டி
   1. மரநாய் 2. நரி 3. யானை

36) உடலை நோய்களில் இருந்து பாதுகாக்கும் போசணை அதிகமுள்ள உணவுச்சோடி
   1. உருளைக்கிழங்கு வல்லாரை
   2. மாம்பழம், அன்னாசி
   3. பருப்பு, இறைச்சி

37) ஆங்கில ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது 1948 ஆம் வருடம்
   1. ஏப்ரல் 14 இல் 2. மே 22 இல் 3. பெப்ரவரி 4 இல்





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **14**

தரம்-5 ஆசிரியர் - ஜே.ஜே.பேர்னாட் பகுதி – II நேரம்– 1 மணித்தியாலம் 15 நிமிடம்

**1) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிறுவர்கள் இருவரும் பெரிய கண்ணாடிப் போத்தல் ஒன்றின் அரைப்பகுதிக்குத் தண்ணீரை நிரப்பினர். பின் நீல நிற மையை விட்டுத் தண்ணீரை நீல நிறமாக்கினர். போத்தலின் மீதிப் பகுதியைத் தேங்காய் எண்ணெய்யை ஊற்றி நிரப்பிப் போத்தலை மூடியினால் இறுக்கி மூடினர். அதன் பின்னர் போத்தலைக் கிடையாக வைத்து மெதுவாக உருட்டினர். போத்தலில் உள்ள நீர் கடல் அலைபோல உருண்டு உருண்டு புரள்வதைக் கண்டனர்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. பாதி என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக? ................................
2. சிறுவர்கள் போத்தலின் எவ்வளவு பகுதிக்குத் தண்ணீரை நிரப்பினர்?.........................
3. வேகமாக என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக?..............................................................
4. மேற்கூறப்பட்ட வினா (3) இல் கூறப்பட்ட வாக்கியத்திலுள்ள அடைமொழி ஒன்றை எழுதுக.......................................
5. போத்தலினுள் தேங்காய் எண்ணெய்யை ஊற்றிய பின் சிறுவர்கள் யாது செய்தனர்? ......................................
6. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ......................................

**2 தொடக்கம் 6 வரையான வினாக்களில் தரப்பட்ட தொடர்புக்குரிய தனிச்சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

2) மெய்ம்மையைக் கடைப்பிடித்து அறநெறியில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அமைதியான முறை ................................(சத்தியசோதனை / சத்தியாக்கிரகம்)

3) எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை ........................(அஹிம்சை / ஹிம்சை)

4) ஒரே பாடசாலையில் ஒன்றாகக் கற்பவர்கள் ..............................(சகபாடிகள் / நண்பர்கள்)

5) நடுவு நிலையின்மை .............................(பராமுகம் / பாரபட்சம்)

6) அரசராகப் பொறுப்பேற்பதை சுட்டி கொண்டாடப்படும் விழா ................................(முடிசூட்டு விழா / கண்விழா)

**7) பின்வரும் குறள்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.**
   1. தினைத்துணை நன்றி செய்யின்
      பனைத்துணையாகக் கொள்வர் ...............................

2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
........................பின் செல்பவர்

**8) பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.**

1. இடர் வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
..................................................
உறவு கொள்வர் அப்பா

2. எண்ணிய முடிதல் வேண்டும்
..................................................
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

9) பின்வரும் வெற்றிடங்களை பூரணப்படுத்துக.
1. திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறட்பாவும் ..........................வரிகளை கொண்டதாகும்.
2. திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலும் ........................குறட்பாக்கள் உள்ளன.

10) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.
1. What are they? ..................................
2. What do you like? ..................................

**11, 12 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் தெரிவு செய்து கோடிடுக.**

11) There ......................(is/are) forty children in my class

12) What are ..................................? (this/these)

13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
உங்களுக்கு வயது எத்தனை? ..................................................

14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக? மட்ட சருங்கலயக் ஹதலா தென்ன ..........................................................

15) புத்தகப்படிப்பினால் மட்டும் ஒருவர் அறிவை பெற்றுவிட முடியாது. அனுபவம் மூலம் பெறும் கல்வியே சிறந்தது. புதிய அனுபவங்களைப் பெறுவதற்காக பயனுள்ள கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்து கொண்டேன் என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களிற்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)
1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................


**தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.**

16) 1. 12 ட 750ml ஐ மில்லி லீற்றரில் எழுதுக. ..................................ml
2. 240m ஐ மீற்றர் சென்ரிமீற்றரில் எழுதுக. ...............m ...............cm





17) 
உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள
1. தட்டையான மேற்பரப்புகள் எத்தனை? ......................................
2. அவ்வெண்ணை எழுத்தில் எழுதுக? ......................................

18) 

1. வட்டத்தில் உள்ள எண்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக?
..........................................................
2. அவ்வெண்ணை எழுத்தில் எழுதுக?
..........................................................

19) 1.

| | |
|---|---|
| 278 | 596 |
| 367 | 435 |

கட்டத்தில் உள்ள எண்களில் மிகப்பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் கூட்டி வரும் விடையை எழுதுக.
..................................................


2. 2963 ஐக் கூட்டுத்தொகையாகத் தரும் இரு எண்களையும் எழுதுக? ...................

20) 20 கொய்யாப்பழங்களில் 3/10 ஐ ரவியும் மீதியை கீதாவும் பெற்றனர். கீதா பெற்ற கொய்யாப்பழங்கள் எத்தனை? ...............................

21) சதுரம் ஒன்றின் சுற்றளவு 36 சென்ரிமீற்றர் எனின் சதுரத்தின் ஒருபக்க நீளம் யாது?
..............................................


22) முன்னாலும் பின்னாலும் வரும் எண்களை எழுதுக. ...................4099 .................

23) பின்வரும் பின்னங்களைக் கூட்டுக. 1/3 + 1/6 = ...............................

24) 
உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்கு சமன்?
..........................................................

25) மைதானம் ஒன்றில் மூன்று பிள்ளைகள் நின்ற விதம் கீழ்வருமாறு அமைந்திருந்தது. சமன் நின்ற இடத்திலிருந்து 10m வடக்கே சாந்தனும் 10 மீற்றர் மேற்கே முகுந்தனும் நின்றனர். முகுந்தனுக்கு எத்திசையில் சாந்தன் நின்றான்? ..............................

26) ஒரு பாத்திரத்தில் 1☒875☒☒ குளிர்பானம் உள்ளது. அக்குளிர் பானம் ஐந்து சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர்பானத்தின் அளவு எத்தனை மில்லிமீற்றர்? ..............................................

27) தரப்பட்டுள்ள உருவில் செங்கோணத்தை காட்டும் ஆங்கில எழுத்துக்கள் எவை? ..............................


# நைஜீரியாவில் தற்கொலைப்படைத் தாக்கு: 19 பேர் உடல் சிதறிப் பலி; 70 பேர் படுகாயம்!





மைடுகுரி,பெப்.19

நைஜீரியா நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மைடுகுரி நகரில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் நடத்திய மூன்று தாக்குதல்களில் 19 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமியச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியைக் கொண்டுவரவேண்டும் என்று போகோ ஹராம் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். கடந்த எட்டாண்டுகளாக இவர்களின் கொலைவெறிக்கு சுமார் 20 ஆயிரம் மனித உயிர்கள் பலியாகியுள்ளன.

இந்த நிலையில், நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாவட்ட தலைநகரான மைடுகுரி நகரில் உள்ள மீன் சந்தையில் நேற்று முன்தினம் இரவு தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் மூன்று பேர் நடத்திய தாக்குதல்களில் 19 பேர் உடல் சிதறி பலியாகினர். 70 பேர் படு காயம் அடைந்தனர்.

காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் இந்தத் தாக்குதலில் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

## அமெ. ஜனாதிபதித் தேர்தலில் தலையீடு: 13 ரஷ்யர்கள் மீது குற்றச்சாட்டுப் பதிவு



அமெரிக்க நாடாளுமன்றம் மற்றும் அதிபர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் ட்ரம்புக்கு ஆதரவாக பிரசாரம் செய்தனர் என ரஷ்யாவைச் சேர்ந்த 13 பேர் மீது குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றம் மற்றும் அதிபர் பதவிக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்தது என வெளியான குற்றச்சாட்டு தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.


குடியரசுக் கட்சி வேட்பாளராக அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற விளாடிமிர் புடின் உத்தரவின் பேரில் ரஷ்ய நாட்டின் உளவுத்துறை இணையத்தள ஊடுருவலில் ஈடுபட்டு, ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரி கிளிண்டனை வீழ்த்தி, நினைத்ததை சாதித்து விட்டனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக ரொபர்ட் முல்லர் தலைமையில் விரிவான விசாரணை நடத்த தீர்மானித்துள்ளோம் என அமெரிக்க நாடாளுமன்ற புலனாய்வுக்குழு கடந்த ஆண்டில் அறிவித்தது.

இந்த விசாரணையின்போது அமெரிக்கர்கள் என்ற போலி அடையாளத்தை ஏற்படுத்திக்கொண்டு சிலர் இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் ஹிலாரி கிளிண்டனுக்கு எதிரான பொய் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல இணையத்தள ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட மூன்று நிறுவனங்கள் மற்றும் ரஷ்யாவை சேர்ந்த 13 தனிநபர்கள் மீது நேற்றுமுன்தினம் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## மெக்சிக்கோவில் பயங்கர நிலநடுக்கம்



ரிச்டர் அளவுகோலில் 7.2

மெக்சிக்கோ நாட்டில் நேற்று முன்தினம் ரிச்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாக பதிவான பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தலைநகரான மெக்சிக்கோ சிற்றிக்கு அருகில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பசிபிக் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள ஓயாசாகா நகருக்கு வடகிழக்குத் திசையில் சுமார் 53 கிலோமீற்றர் தொலைவிலும், பூமிக்கடியில் சுமார் 24 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்கப் புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

கௌதமாலா நாட்டின் தெற்கு பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் மெக்சிக்கோ நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 369 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மெக்சிக்கோவில் ஹெலிக்கொப்டர் விபத்து மூன்று குழந்தைகள் உட்பட 13 பேர் சாவு

### உள்துறை அமைச்சர் அருந்தப்பு



மெக்சிக்கோ சிற்றி,பெப்.19

மெக்சிக்கோ நாட்டில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட அமைச்சர் சென்ற ஹெலிக்கொப்டர் தரையிறங்கும்போது கீழே விழுந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிக்கோ நாட்டின் தலைநகரான மெக்சிக்கோ சிற்றி மற்றும் அருகில் உள்ள சில மாவட்டங்களை நேற்றுமுன்தினம் மாலை கடுமையான நிலநடுக்கம் தாக்கியது. ரிச்டர் அளவில் 7.2 அலகுகளாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஒக்சாக்கா மாநிலத்துக்கு உட்பட்ட பகுதிகளை ஆய்வுசெய்து, மீட்பு நடவடிக்கைகளை கண்காணிக்க அந்நாட்டின் உள்துறை அமைச்சர் நவ ரேட்டே, ஒக்சாக்கா மாநில ஆளுநர் அலே ஜாண்ட்ரோ முரட் ஆகியோர் ஒரு ஹெலிக் கொப்டரில் சென்றனர்.

அந்த ஹெலிக்கொப்டர் தரையிறங்கும் போது நிலை தடுமாறி கீழே விழுந்தது. உள்துறை அமைச்சர், ஒக்சாக்கா ஆளுநர் உள்ளிட்டோர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர். இந்த விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் காயமடைந்த 16 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மருத்துவமனையில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இதனால் இந்த விபத்தில் உயிழந்தவர்கள் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

# திபெத்தில் 1,300 வருட பழமை வாய்ந்த புத்த மதக் கோவிலில் பெரும் தீ விபத்து



திபெத் நாட்டின் தலைநகர் லாசாவில் ஜோகாங் என்ற கோவில் உள்ளது. இது புத்த மதத்திற்கான புனித கோவிலாகும். ஆயிரத்து 300 வருடங்கள் பழமை வாய்ந்த இந்தக் கோவில் கடந்த 2 ஆயிரம் ஆண்டு யுனெஸ்கோவால் உலக பாரம்பரியத்தலம் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், கோவிலில் நேற்று முன்தினம் இரவு திடீரெனப் பெரிய அளவில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட புகை மண்டலம் அப்பகுதியை மறைத்ததுடன் தீ விண்ணை முட்டும் அளவிற்கு கொழுந்து விட்டு எரிந்தது. இதனை தொடர்ந்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. தீயால் கோவிலுக்கு ஏற்பட்ட சேத விவரங்களும் தெரியவரவில்லை. பெரிய அளவில் ஏற்பட்டுள்ள இந்தத் தீ விபத்தால் வருங்காலத்தில் கோவிலின் நிலை பற்றிய அச்சம் எழுந்துள்ளது.

# பிறந்து 4 மாதமான குழந்தையை இரண்டாக பிளந்து தந்தை மஜிக்

அமெரிக்காவில் மஜிக் செய்யும் ஒருவர் தனது குழந்தையை இரண்டாகப் பிளந்து மஜிக் செய்த வீடியோ வைரலாகப் பரவி வருகிறது.

அமெரிக்காவை சேர்ந்த ஜஸ்டின் ஃப்லாம் என்பவர் மேஜிக் தொழில் செய்துவருகிறார். இவருக்கு 4 மாதப் பெண் குழந்தை ஒன்று உள்ளது. அவர் ஒருஆபத்தான மஜிக் செய்வதற்காக அந்த குழந்தையைப் பயன்படுத்தியுள்ளார். அந்தக் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. அதை வைத்து மஜிக் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

அதன்படி இரண்டு புத்தகங்களை எடுத்து அந்தக் குழந்தையின் வயிற்றுப் பகுதியில் பிளவு செய்தது போல் செய்தார். என்ன ஆச்சரியம் என்றால் அந்தக் குழந்தை இரண்டாகப் பிளந்தது. மேலும் அந்தக் குழந்தை இரண்டாக துண்டிக்கப்பட்ட பிறகும் சிரித்துக் கொண்டிருந்த காட்சிகளையும் படம் பிடித்தார்.

இதை பேஸ்புக்கில் பதிவு செய்தார். அதைப் பார்த்து சுமார் 14.3 கோடி பேர் ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்த மஜிக்கை எப்படி செய்திருப்பார் என அனைவரும் திகைத்தனர். இந்த மஜிக் தொடர்பாக பார்வையாளர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். அதில் குழந்தை வைக்கப்பட்ட மேசையின் கீழ் பகுதி கண்ணாடி என்றும் அது குழந்தையின் முழு உடலை மறைத்துள்ளது என்றும் கூறி வருகின்றனர்.



# மீண்டும் தர்ம யுத்தத்தை தொடங்கும் ஓ.பி.எஸ்.



சென்னை,பெப்.19

மக்களிடத்தில் இழந்த செல்வாக்கை மீட்டெடுக்கவே மீண்டும் சசிகலா குடும்ப எதிர்ப்பு, மோடியின் தலையீடு என இன்னொரு தர்மயுத்தத்தை துணை முதல்வர் ஓ.பி.எஸ். தொடங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் முதல்வர் பதவி வகித்த ஓ.பி.எஸ்.ஸுக்கு மக்களிடம் செல்வாக்கு இருந்தது. முதல்வர் பதவியை சசிகலா பறித்ததமையால் ஓ.பி.எஸ். தர்ம யுத்தத்தை தொடங்குகிறேன் என அறிவித்தார்.

அப்போது மக்கள் செல்வாக்கு ஓ.பி.எஸூக்கு அமோகமாக இருந்தது. அதன்பின்னர் மீண்டும் ஈ.பி.எஸ். அணியுடன் இணைந்து துணை முதல்வரான நிலையில் மக்களின் செல்வாக்கை ஓ.பி.எஸ். இழக்கத் தொடங்கினார்.

அத்துடன் தம்மை நம்பி வந்த ஆதரவாளர்களுக்கு முக்கிய பதவிகளைப் பெற்றுத்தர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டார். இதனால் அவரது ஆதரவாளர்கள் கடும் அதிருப்தியில் இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் உள்ளாட்சித் தேர்தல் வரவுள்ளது. அத்துடன் நீக்கப்பட்ட தினகரன் ஆதரவாளர்களுக்கு பதில் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படவும் இருக்கின்றனர்.

இந்த இரண்டு சூழல்களையும் பயன்படுத்தி தமது இழந்த செல்வாக்கை மீட்க ஓ.பி.எஸ். பிரயத்தனம் செய்து வருகின்றார். அதனால்தான் பிரதமர் மோடி தலையீடு, சசிகலா குடும்பத்தின் நெருக்கடி எனப் பல விடயங்களைப் போட்டு உடைக்கிறார் ஓ.பி.எஸ்.

சசிகலா குடும்ப எதிர்ப்பை வலுவாக்குவதன் மூலம் சமூக ரீதியாகவும் தினகரன் பக்கம் அ.தி.மு.கவினர் செல்வதைத் தடுக்க முடியும் என கருதுகிறாராம் ஓ.பி.எஸ்.

# கமல், ரஜனியை மக்கள் நம்பக்கூடாது



நடிகர் சத்யராஜ்

சென்னை,பெப்.19

கமல், ரஜனி அரசியல் பயணம் வேகம் எடுத்துள்ள நிலையில் நடிகர் சத்யராஜ், அவர்கள் இருவரையும் மக்கள் ஒருபோதும் நம்பி ஏமாந்து விடக்கூடாது என்று நடிகர் சத்யராஜ் பேசியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கமலும், ரஜனியும் அரசியல் பிரவேசம் செய்து விட்டார்கள். இருவரில் அரசியலில் சாதிக்கப்போவமை யார்? என்ற பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில் முன்னணி அரசியல் கட்சிகளை கைவிட்டு மக்களின் கவனம் புதிதாக தொடங்க இருக்கும் இவர்களது கட்சியின் பக்கம் திரும்புமா? என்ற எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. கமல் வருகிற 21 ஆம் திகதி 'நாளை நமதே' என்ற கோஷத்தோடு அரசியல் பயணத்தை தொடங்கவுள்ளார். ரஜனியும் தான் தொடங்கப் போகும் கட்சிக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக நிர்வாகிகளை நியமித்து வருகிறார்.

இப்படி இருவரது அரசியல் பயணமும் வேகம் எடுத்துள்ள நிலையில் நடிகர் சத் யராஜ் கூறிய வை வருமாறு:-

நடிகர்கள் அரசியலுக்குவருகின்றமைஅன்றாட செய்திகளாகி வருகின்றன. நடிகர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. தேவைக்கு அதிகமாகவே சம்பாதித்து இருக் கிறார்கள். ஏன், நானே மூன்று தலைமுறைக்கு சொத்து சேர்த்து வைத்திருக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிரபல நடிகர்கள் என்பதால் எல்லாம் தெரிந்தவர்கள் என்று அவர்களை ஒரு போதும் நம்பி விடாதீர்கள். அவ்வாறு நினைப்பது தவறு. நடிகர்கள் அரசியலில் தோற்றால் அது பெரிய தோல்வி அல்ல. வெற்றி பெற்றால் உங்கள் நிலைமை என்னவாகும் என்று யோசியுங்கள். எனவே நடிகர்கள் அரசியலில் தோற்க வேண்டும். கடவுள் பெயரால் ஏற்றத் தாழ்வு உருவாகிவிடக் கூடாது. புரிதலுடன் கூடிய நாத்திகர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். பெரியாரின் கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துள்ளார். (ப)

# அ.தி.மு.கவை 30 வருடங்கள் இயக்கியது சசிகலா குடும்பம்

## ஓ.பி.எஸ். பரபரப்பு பேட்டி

சென்னை,பெப்.19

சசிகலா குடும்பம் தான் அ.தி.மு.க.வை 30 வருடம் மறைமுகமாக இயக்கியதுஎன்றுதுணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் பரபரப்பு பேட்டி அளித்திருக்கிறார்.

சசிகலா குடும்பம் பற்றியும் தான் முன்பு முதல்வராக இருந்தமை தொடர்பாகவும் பேட்டி அளித்துள்ளார் ஓ.பி.எஸ்.

அதன்படி முதல்வராக இருந்தபோது சசிகலா குடும்பத்தின் நெருக்கடியைக் கஷ்டப்பட்டு தாங்கினேன். வேறு நபர்களாக இருந்தால் தற்கொலை செய்திருப்பார்கள். மேலும் சசிகலா குடும்பத்தினர் 30 ஆண்டுகளாக கட்சியை மறைமுகமாக இயக்கினார்கள். அவர்கள் தான் கட்சியை கட்டுக்குள் வைத்திருந்தனர்.

அதேபோல் ஜெயலலிதாவுக்கு விசுவாசமாக இருந்த காரணத்தால் துரோகி என எனக்குப் பட்டம் சூட்டினர். ஜெயலலிதாவுக்கு அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க கோரினேன். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது குடும்பத்தினருடன் அரசுமுறை சுற்றுப் பயணமாக இந்தியா சென்றுள்ளார். இந்தநிலையில் தனது சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலை தனது குடும்பத்தினருடன் சென்று சுற்றிப்பார்த்தார்.

# புற்றுநோயை எதிர்க்கும் 3 வகையான அரிசிகள்

## ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

சதீஸ்கரில் புற்றுநோயை எதிர்க்கும் பாரம்பரியமிக்க மூன்று வகையான அரிசிகளை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்தியாவின் ராய்பூரிலுள்ள இந்திரா காந்தி க்ரிஷி விஷ்வவித்யாலயா மற்றும் மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்திலும் புற்று நோய் தொடர்பாக ஆராய்ச்சிகள் இடம்பெற்றன.

ஆய்வுகளின் முடிவில் சதீஸ்கரின் பாரம்பரியமிக்க மூன்று அரிசி வகைகளான கத்வான், மகாராஜி, லைச்சா முதலிய அரிசிகளில் புற்று நோயை எதிர்த்து போராடும் திறன் உள்ளது கண்டறியப்பட்டது.இவைகள் நுரையீரல் மற்றும் மார்பக புற்றுநோய்களை குணப்படுத்தும் பண்புகளைப் பெற்றுள்ளன. அதிலும் லைச்சா வகை அரிசி புற்று நோய் கலன்கள் பரவுவதைத் தடுப்பதுடன்,கலன்களை அழித்து குணப்படுத்தும்.

மேலும், இவ் அரிசி பல நோய்களை நீக்கும்மருந்தாகவும், தோல்நோய்களுக்கும் குறிப்பாக பஸ்தார் பழங்குடி இனத்தினர் வசிக்கும் பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. கத்வான் வகை அரிசி கீல்வாதம் முதலிய நோய்களை குணப்படுத்தும். இவைகளை தினசரி 200 கிராம் உட்கொள்வதன் மூலம் பயன்பெறலாம் என ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

# ஊழலால் பயனடைகிறது பா.ஜ.க.

## கேஜ்ரிவால் தாக்கு



ஊழலால் காங்கிரஸ் பயனடைந்த தைப்போல,தற்போது பா.ஜ.கவும் பயனடைந்து வருகிறது என டில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து சுட்டுரை ஒன்றில் சனிக்கிழமை தெரிவித்துள்ளவை வருமாறு:-

பஞ்சாப் சர்வதேச வங்கி ஊழல் 2011 ஆம்ஆண்டுதொடங்கி, தற்போது வரை நடைபெற்றுவருகின்றன. காங்கிரஸ் மீது பா.ஜ.கவும், பா.ஜ.க. மீது காங்கிரஸும் மாறி மாறிக் குற்றம் சாட்டி வருகின்றன.

காங்கிரஸ்ஆட்சிக் காலத்தில் நடைபெற்றஊழல்அனைத்தும் பா.ஜ.க. ஆட்சியிலும் நடைபெறுகிறது என்பதுதான் உண்மை.ஊழலால் முன்பு காங்கிரஸ் பயனடைந்தது.அதே ஊழலால்தற்போது பா.ஜ.கவும் பயனடைந்து வருகிறது. இதனால்தான், எந்தவோர் ஊழல் தொடர்பாகவும் காங்கிரஸ்காரர்களை பா.ஜ.கசிறைக்குஅனுப்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா - ஈரான் இடையே 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஈரானில் இருந்து நேற்றுமுன்தினம் ஐதராபாத் வந்தடைந்த அவர், ஐதராபாத்தில் இஸ்லாமிய கல்வியாளர்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் மாநாட்டில் சிறப்புரையாற்றினார்.

இந்நிலையில், டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை ஈரான் அதிபர் ரவுகானி சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது ராணுவம், பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு



மற்றும் ஆற்றல் துறையில் இருநாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சுநடத்தினர். பிராந்திய விவகாரங்கள், அரசியல் சூழ்நிலைகள் பற்றி விரிவாகப் பேசினர். இந்தச் சந்திப்புக்கு பிறகு, வர்த்தகம், பாதுகாப்பு, நாட்டின் ஆற்றல் ஆகிய முக்கிய பகுதிகளை முன்னேற்றும் பொருட்டு, இரட்டை வரி விலக்கு உட்பட 9 ஒப்பந்தங்கள் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே கையெழுத்தாகின.

இரு நாட்டுத்தலைவர்களும் வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு, இணைப்பு, ஆற்றல், பிராந்திய பிரச்சினைகள் போன்ற பயனுள்ள பேச்சு நடத்தியுள்ளனர் என வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரவிஷ்குமார் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# ‘பங்களாதேஷ் அணிக்கெதிரான வியூகத்தில் வென்றுவிட்டேன்’

பங்களாதேஷ் அணிக்கெதிரான எனது வியூகத்தில் வெற்றி பெற்றுவிட்டேன் என இலங்கை அணிப் பயிற்றுவிப்பாளர் ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி, 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் இறுதியாக நடைபெற்ற ரி-20 போட்டி என் பவற்றில் மேற்கொண்ட வித்தியாசங்கள், வியூகங்கள் மற்றும் பங்களாதேஷ் அணி தொடர்பில் தன்னிடம் காணப்பட்ட அறிவு உள்ளிட்டவை காரணமாகவே சொந்த மண்ணில் அண்மைக்காலமாக வெற்றிகளைப் பதிவுசெய்து வந்த பலமிக்க பங்களாதேஷ் அணியை வீழ்த்த முடிந்தது என இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் சந்திக்க ஹத்துருசிங்க தெரிவித்தார்.



ஹத்துருசிங்க

அத்துடன், பங்களாதேஷ் வீரர்களை பல்வேறு அணுகுமுறைகளுடனும், திட்டங்களுடனும் கையாள முடிந்தமையால் தான் இந்த வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என தெரிவித்த ஹத்துருசிங்க, இலங்கை அணியுடனான 2ஆவது ரி -20 போட்டியில் சிறப்பாக விளையாடுவதற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன் எனவும் எதிர்காலத்தில் பங்களாதேஷ் அணியை தொடர்ந்து அவதானிக்கவுள்ளேன் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை வீரர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற பதிலிலிருந்து நான் முழு திருப்தி அடைந்துள்ளேன். உண்மையில் எனது நாட்டுக்காக விளையாடி பெற்றுக்கொடுத்த வெற்றியைப் போன்ற உணர்வை இது ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இதற்காக ஒருசில காலம் தேவைப்பட்டாலும் வீரர்களுடன் மேற்கொண்ட தொடர்பாடல் வெற்றியளித்துவிட்டது என்றார் ஹத்துருசிங்க.

சந்திக்க ஹத்துருசிங்கவின் பயிற்றுவிப்பின் கீழ் கத்துக்குட்டி அணியாக இருந்த பங்களாதேஷ் அணி கடந்த 3 வருடங்களுக்குள் கிரிக்கெட் உலகில் கொடி கட்டிப் பறக்கும் அனைத்து அணிகளுக்கு எதிராகவும் வெற்றிகளைக் குவித்து கிரிக்கெட் உலகில் தனி இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோஹ்லியை பாராட்ட புதிய அகராதி வேண்டும்



ரவிசாஸ்திரி புகழாரம்

இப்போது உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி தான் என்று பயிற்றுவிப்பாளர் ரவிசாஸ்திரி புகழாரம் சூட்டியுள்ளார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை நீண்ட காலத்தின் பின் கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில் அணியின் பயிற்சியாளர் கூறியவை வருமாறு–

தென்னாபிரிக்காவை ரவிசாஸ்திரி அவர்களது இடத்தில் வீழ்த்துவது அடிக்கடி நடக்கக்கூடிய விடயம் அல்ல.

இந்திய கப்டன் விராட் கோஹ்லியைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. புதிய ஆங்கில அகராதியை வாங்கித்தான் வார்த்தைகளை தேடிப்பிடிக்க வேண்டும். ஒரு துடுப்பாட்ட வீரராக இந்தத் தொடரில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்பதை பாருங்கள்? வலுவான தென்னாபிரிக்காவின் பந்து வீச்சுத் தாக்குதலுக்கு எதிராக 6 ஆட்டங்களில் 500 ஓட்டங்களுக்கு மேல் குவித்திருக்கிறார் என்றால் வேறு என்ன சொல்வது?

# இந்திய வீரர்களுக்கு உணவு வழங்காததால் சமையல்காரரை நீக்கியது தென்னாபிரிக்கா



இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு இந்திய உணவு வழங்காமையால் சமையல்காரர் நீக்கப்பட்டு, இந்திய உணவு தயாரிக்கும் ஹோட்டலை ஏற்பாடு செய்தது தென்னாபிரிக்கா.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் முடிவடைந்துள்ளது. இதில் இந்தியா 5:1 எனத் தொடரைக் கைப்பற்றியுள்ளது. 6ஆவது மற்றும் கடைசி போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது. இந்திய கிரிக்கெட் வீரர்கள் அங்கு பரிமாறப்படும் உணவு வகைகளால் அதிருப்தி அடைந்தனர்.

போட்டியின் போதும், பயிற்சியில் ஈடுபட்ட போதும் இரு நாட்டு வீரர்களுக்கும் உணவு வழங்க சமையல்காரர் பணியமர்த்தப்பட்டிருந்தார். இவர் இந்திய வீரர்களுக்கு உணவு வழங்கவில்லை என்று கூறப்படுகிறது. மேலும், இந்திய வீரர்கள் கேட்ட இந்திய உணவுகளை வழங்க மறுத்துவிட்டார். இதனால் இந்திய வீரர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். ஆகவே, அந்த சமையல்காரர் நீக்கப்பட்டு, இந்திய உணவு கிடைக்கும் ரெஸ்ரோரண்டில் இருந்து சமையல்காரர் ஒருவர் உணவு வழங்க பணியமர்த்தப்பட்டுள்ளார்.

ஜோகன்னஸ்பர்க் மைதானத்திலும் இந்திய உணவு வகைகள் தயார் செய்யும் ஹோட்டலில் இருந்து ஒருவர் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

# இந்தியா, ஆஸி, பாக். வழியில் இலங்கையும்

இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் ரி-20 லீக் தொடரை நடத்துவது போல் இலங்கையும் ரி-20 லீக் தொடரை நடத்த இருக்கிறது.

இந்திய கிரிக்கெட் சபை கடந்த 2008ஆம் ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) என்ற ரி-20 தொடரை அறிமுகப்படுத்தியது. இதற்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. வீரர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் கிடைப்பதுடன், பி.சி.சி.ஐ. அதிக அளவில் வருமானமும் ஈட்டுகிறது.

இதையடுத்து ஆஸ்திரேலியா பிக் பாஷ் என்ற ரி-20 லீக் தொடரையும், பாகிஸ்தான் கிரிக்கெட் பாகிஸ்தான் சூப்பர் லீக் என்ற தொடரையும், பங்களாதேஷ் பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரையும் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் தற்போது இலங்கை கிரிக்கெட் சபையும் லங்கன் பிரீமியர் லீக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தொடர் வரும் ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை நடைபெறும் என இலங்கை அறிவித்துள்ளது.



# 36 ஆவது வயதில் முதலிடம் பெற்று பெடரர் உலக சாதனை

36 ஆவது வயதில் முதலிடம் பெற்று அதிக வயதில் முதலிடத்தை பிடித்த வீரர் என்ற சாதனையை பெடரர் பிடித்துள்ளார்.

நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் 2ஆம் நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 4:6, 6:1, 6:1 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் ரொபின் ஹாசை தோற்கடித்து அரைஇறுதியை எட்டினார்.

சமீபத்தில் ஆஸ்திரேலிய ஓபனை வசப்படுத்தி அசத்திய பெடரர் தற்போதைய வெற்றியின் மூலம், உலக டென்னிஸ் தரவரிசையில் ரபெல் நடாலை (ஸ்பெயின்) பின்னுக்குத் தள்ளிவிட்டு மீண்டும் முதல் இடத்தைத் தட்டிச் சென்றார். மேலும் அதிக வயதில் முதலிடத்தை பிடித்த வீரர் என்ற சிறப்பையும் 36 வயதான பெடரர் பெற்றார். இதற்கு முன்பு அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசி தனது 33ஆவது வயதில் முதலிடத்தை பெற்றதே சாதனையாக இருந்தது.

2004ஆம் ஆண்டு முதல் முறையாக முதல் இடத்தைப் பிடித்த பெடரர், கடைசியாக 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் தர வீரராக வலம் வந்தார். அதன்பிறகு நீண்ட இடைவெளிக்கு பிறகு இப்போது அரியணையில் ஏறியிருக்கிறார். இந்த வயதில் முதல் இடத்துக்கு முன்னேறியதை நம்பவே முடியவில்லை என்று கூறுகிறார் பெடரர்.

# 36 வருடங்களை தாண்டிய இலங்கை டெஸ்ட் கிரிக்கெட்

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் ஆனது நேற்று முன்தினத்துடன் 36 ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்துள்ளது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி கொழும்பு சரவணமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணிக்கு பந்துலவர்ணபுர தலைமை தாங்கினார். போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.







## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ் விடயத்தை வலியுறுத்தியுள்ள கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள், மஹிந்தவின் ஆதரவுடன் புதிய அரசு அமையுமானால்உதவிகள்அனைத்தும் நிறுத்தப்படும் எனவும் எச்சரித்துள்ளனராம்.

ஐக்கியதேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும்பிரதான பொது அமைப்புகளின்பிரதிநிதிகளுடன்கடந்த நான்கு நாள்களாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் தொடர்ச்சியாகப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று இரவும் முக்கிய சந்திப்பு ஒன்று கொழும்பில் இடம்பெற்றது என்றும், ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கவேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூறப்பட்டுள்ளதாகவும் உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

நல்லாட்சி அரசைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை மேற்குலக நாடுகள் வழங்கும் என்றும், அதனால் 2020ஆம் ஆண்டுவரை மைத்திரி – ரணில் கூட்டாக ஆட்சிசெய்யவேண்டும் எனவும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மற்றும் அவரது சகாக்கள் மீண்டும் ஆட்சியில் அல்லது அரசை நிர்ணயிக்கும் சக்தியாக உருவாகிவிடக்கூடாது என மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் எடுத்துரைத்துள்ளனர் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

மைத்திரி, ரணில் நல்லாட்சி குழப்பமடைந்து, மஹிந்த ஆதரவுடன் புதிய அரசு அமையுமானால் நிதியுதவிகள் உள்ளிட்ட அனைத்துச் சலுகைகளும் நிறுத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சிக்கு அமெரிக்க இராஜ தந்திரி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடன் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை பிரதமராக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசைச் செயற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புகிறார் எனவும் கட்சித் தகவல்கள் கூறின. (ஐ)

## வெளியேறுகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு எதிரணியுடன் இணைந்து ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்தால் அந்த அரசில் தன்னால் நீடிக்க முடியாது எனதுமிந்த திஸாநாயக்க ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் எனக் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால், தான் விரும்பும் வேறு ஒரு கட்சியில் இணைந்து கொள்ள அனுமதிக்குமாறு ஜனாதிபதியிடம், துமிந்த கோரியுள்ளார் என்றும், எனினும், துமிந்த திஸாநாயக்கவின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## நாடாளுமன்றத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

தனது டுவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர், மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தியது.

அதேபோன்று தற்போது நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தஅரசு முன்வரவேண்டும். அதன் பின் கூடிய விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

பொதுமக்களுக்குத் தங்கள் எதிர்பார்ப்பின் படியான அரசொன்றை அமைத்துக்கொள்வதற்கான ஜனநாயக உரிமையை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்துக் கருத்து வெளியிடும் போதே மாவை இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய நிலையில் தேசிய அரசியலில் மாற்றம் ஏற்படுமாயின், புதிய அரசமைப்பின் மூலம் அரசியல் தீர்வு நோக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பயணத்தில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்துடன், சர்வதேச நாடுகள் பலவும் தற்போதைய நல்லாட்சி அரசு தொடர வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில், தற்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கு இடையே உருவாகியுள்ள கருத்து வேற்றுமைகளைச் சமரசம் செய்து கொண்டு தொடர்ந்தும் நல்லாட்சியைக் கொண்டு செல்ல வேண்டும். – என்றார். (ஐ)

## கொத்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொத்மலை நீர்தேக்கத்திற்கு நீர்வழங்கும் ஆக் ரோயா ஆற்றில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

– இவ்வாறு உயிரிழந்தவர்கள் கம்பஹா பகுதியைச் சேர்ந்த பியூமிசாந்த் பிரசாதி பெரேரா வயது 24 எனும் யுவதியும், மற்றுமொரு இளைஞனும் எனக் கூறப்பட்டது. உயிரிழந்த இளைஞன் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

நுவரெலியா பகுதியிலிருந்து கம்பஹா பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த காரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. காரில் இளைஞரும், யுவதியும் மட்டும் பயணித்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. உயிரிழந்த இருவரின் சடலங்களும் லிந்துலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை லிந்துலை மற்றும் தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற உமா மகேஸ்வரனின் 73 ஆவது பிறந்தநாள் நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல இடங்களில் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் பட்சத்தில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் ஐக்கிய தேசிய கட்சிக்கே வாக்களித்திருக்கலாம் என்ற கருதுகின்றனர் என ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காமல் போனமை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிழை இல்லை. குறிப்பாக வடக்கு – கிழக்கில் பெரும்பான்மையான இடங்களிலே வெற்றி வாகை சூடினாலும் தற்போது உள்ள தேர்தல் முறையானது ஒரு குழப்ப நிலையை உருவாக்கியுள்ளது. நாடாளுமன்றம் போன்று வேறு கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவது உள்ளூராட்சிச் சபை சட்ட திட்டங்களில் இல்லை. ஆகவே தலைவர் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் சபை நடத்த முடியும். மேலும், தேசியக் கட்சிகளுடன்சேர்ந்துதான் சபையை நடத்தவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஏனெனில், எங்களது இனப் பிரச்சினை இறுதி வடிவம் பெற்று தீர்க்கப்படும் வரை தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது என்பது தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது. – என்றார். (ஐ-100)

## நிதியமைச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு – பொரளையில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிரணியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில்கூட்டுஎதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட முறையில் என்னிடம் நிதியமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். எனினும், நான் மறுத்துவிட்டேன். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், தன்னார்வ அடிப்படையில் அரசுக்கு ஆதரவு வழங்கிப் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பது தவிர அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதில் கூட்டு எதிர்க்கட்சிக்கு எதுவித எதிர்பார்ப்பும் இல்லை என்பதை நான் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினேன் – என்றார். (ஐ)

# இரணைமடுப் பகுதியில் இடம்பெயரும் அரச மரம்

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் வான் பகுதிக்கருகில் 2009 க்கு பின்னர் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அண்மையில் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்த நிலையில்தற்போது அங்கிருந்த அரச மரமும் உயிரோடு பிடுங்கப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

அரச மரத்தைச் சுற்றி பாரிய அளவில் குழியை ஏற்படுத்தி மரம் பாதிக்கப்பட்டாத வகையில் உயிரோடு நகர்த்தும் முயற்சிகள் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இந்த அரச மரமும் மற்றும் ஏற்கனவே குளக்கரையில் இருந்து எடுக்கப்பட்ட புத்தர் சிலையும் பிறிதொரு இடத்தில் வைக்கப்படலாம் எனப் பொது மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# விபத்தில் சிறுவன் காயம்

வவுனியா, பெப்.19

வவுனியா வைரவ புளியங்குளம் யங் ஸ்டார் விளையாட்டு மைதானத்திற்கு அருகே நேற்று மாலை 6.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

வைரவ புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திலிருந்து குருமன்காடு நோக்கி பயணித்த துவிச்சக்கர வண்டி மீது எதிர்த் திசையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இவ் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த சிறுவன் படுகாயமடைந்தான். விபத்தை அடுத்து மோட்டார் வண்டியின் சாரதி தப்பித்து ஓடி விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைத் தெளிவுபடுத்தி ஜனாதிபதியின் செய லாளர் நேற்று நள்ளிரவில் மறுப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டார்.

தற்போது ஆட்சியில் உள்ள கூட்டு அரசை முன் னெடுப்பதே ஜனாதிபதியுடனான நேற்றிரவு சந்திப்பில் எட்டப்பட்ட இறுதித் தீர்மானமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் தெரிவித்தார் என அமைச்சர் சுஜீவ சேனசிங்க கூறினார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடு இன்னும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

கூட்டு அரசின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் நேற்று மாலை 6.40 மணியளவில் ஜனாதிபதியின் இல்லத்துக்குச் சென்றிருந்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு, அங்கு ஜனாதிபதியுடன் பேசி எடுக்கப்பட்டதீர்மானங்களை நேற்றிரவு அலரி மாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் அறிவித்தார்.

இந்தக் கூட்டத்திலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டு அரசை முன்கொண்டு செல்வதே எமதும் ஜனாதிபதியினதும் இறுதித் தீர்மானமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார் என்று அமைச்சர் சுஜீவ சேனசிங்க மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் பிரதமர், சபாநாயகர் ஆகியோருடன் ஐ.தே. கட்சிப் பிரமுகர்களான மலிக் சமரவிக்கிரம, கபிர் காசிம் ஆகியோரும் பங்குபற்றினர்.

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க விலக வேண்டும் என்ற தமது வலியுறுத்தலுக்கு ஐ.தே.கட்சி இணங்காத சூழ்நிலையில் தாம் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் கருத்தை கோரவிருக்கின்றார் என்ற தகவலை ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினார் என்று–

கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

நேற்றிரவு ஜனாதிபதிக்கும், பிரதமர், சபாநாயகர்உள்ளடங்கிய ஐ.தே.கட்சித்தரப்புக்கும்இடையில் நடைபெற்ற சந்திப்பு இரு தரப்புகளுக்கும் இடையிலான விரிசல் மீள இணைய முடியாத நிலைமைக்குச்சென்றுவிட்டநிலையில் முடிவுற்றதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில், ஸ்திரமான அரசியல் நிலைமை உண்டு என்பதை நிரூபிக்கத் தவறும் பட்சத்தில்பொருளாதாரத்துக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். தொடர்ந்தும் இந்த நிலைமை நீடித்தால் பொருளாதாரம் பாதிக்கப்படும். எந்தவொரு அரசியல் சக்தி யேனும் நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்து பொருளாதாரத்தை வலுப்படுத்தநடவடிக்கை எடுக்கவேண்டியது கட்டாயமானது. – என்றார்.

## மைத்திரிபாலவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி அல்லாத ஒரு குழு ஆட்சியமைக்குமாயின் நாம் ஆதரவு வழங்குவோம் என ஏற்கனவே தெரிவித்திருந்தோம். தற்போது கூட்டு எதிரணித் தலைவர் தினேஷ் குணவர்தனவின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளோம். – என்றார். (ஐ)

# யுத்தத்தால் இரண்டு தலைமுறைகளின் பிள்ளைகளை இழந்திருக்கிறோம் நாம்

சாவகச்சேரி, பெப்.19

யுத்த காலத்தில் 10 லட்சம் மக்கள் வடக்கில் இருந்து நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். மக்கள், போராளிகள் என 4 லட்சம் பேர் இறந்துள்ளனர். குறிப்பாக, 18-45 வயதிற்கு இடைப்பட்டவர்களையே இழந்துள்ளோம்.18-45 வயதெல்லை தான் குழந்தை பெறுவதற்குரிய வயதெல்லை. இதனால் நாம் இரண்டு தலை முறை பிள்ளைகளை இழந்துள்ளோம்.- இவ்வாறு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் கலாநிதிக.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிகழ்வில் உரையாற்றிய அவர் –

இடப்பெயர்விற்கு முன்னர் பல மாணவர்களை கொண்டிருந்த இந்த பாடசாலை தற்போது 80 வீதத்தினை இழந்து வெறும் 150 மாணவர்களுடன் இயங்குகின்றது. இது இப் பாடசாலைக்கு மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. யாழில் சில பெரிய, சில ஆரம்ப பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகள் மிகக் குறைவான மாணவர் தொகையை கொண்டு இயங்கி வருகின்றன. வடக்கில் 80பாடசாலைகள் இயங்காமல் பதிவில் உள்ளன. 120 பாடசாலைகளில் இருபதுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். வடக்கில் 30-35 பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகள் தமக்குரிய மாணவர் தொகை இல்லாமலே இயங்கி வருகின்றன.மாணவர் தொகை குறைவிற்கு காரணம், 1981 இல் 8 லட்சம் சனத்தொகை கொண்ட யாழ்ப்பாணம் தற்போது 14 லட்சம் மக்களை கொண்டிருக்க வேண்டிய நிலையில் வெறும் 6 லட்சம் மக்களையே கொண்டுள்ளது.14 லட்சம் மக்கள் இருந்திருந்தால் பாடசாலைகளுக்கு போதிய மாணவர்கள் இருந்திருப்பார்கள்.

வடக்கில்540ஆரம்பப் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் ஓர் அதிபர், ஒரு மாணவனுடன் இயங்கும் பாடசாலைகளும் உள்ளன. 1990 களில் சாதாரணமாக ஒரு குடும்பத்தில் 4 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் காணப்படுவர். அதிகமாக 10-12குழந்தைகளையும்ஒருகுடும்பத்தில் கண்டுள்ளோம்.

ஆனால், தற்போது ஒன்று இரண்டு என சனத்தொகை வீதம் குறைவடைந்து வருகிறது.முஸ்லிம்களின் பெருக்க வீதம் 12,சிங்களவர்களின் பெருக்க வீதம் 5.7,தமிழர்களின் பெருக்க வீதம் 1.5 ஆகவும் காணப்படுகிறது. சில ஆரம்ப பாடசாலைகளின் கால்கோள் விழாவிற்கு ஒரு மாணவன் கூட சேராத நிலை வடக்கில் காணப்படுகிறது. யுத்தத்திற்கு முன் 30மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருந்துள்ளார்.ஆனால் இன்று வடக்கில் 14 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை காணப்படுகிறது. குறைந்தது 20மாணவர்களுக்கு ஒர் ஆசிரியர் என்பதே சர்வதேச விதிமுறை.



### மீசாலை விக்னேஸ்வராவில் வடக்கு அமைச்சர் சர்வேஸ்வரன்

**கல்விச் செலவு இல்லையே**

எமக்கு இரண்டு தேவைகள் உள்ளன. ஒன்று இருக்கக்கூடிய மாணவர்களை சரியான முறையில் பகிர வேண்டும். மற்றையது எமது சனத்தொகை வீதத்தை சற்று அதிகரித்தே ஆக வேண்டும். வேறு வழியில்லை. சில பாடசாலைகளின் அதீத மாணவர் எண்ணிக்கையில் சில விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச மதிய உணவு மற்றும் இலவச மருத்துவ காப்புறுதி இலங்கையில் உள்ளன. ஆகவே, பிள்ளைகளை பெற்றால் அவர்களை படிப்பிப்பதில் கல்விச் செலவு ஏற்படும் என பெற்றோர் பயப்படத் தேவையில்லை. இந்தளவு வசதி வாய்ப்புகள் வேறு எந்த நாட்டிலும் இல்லை. பல்கலைக்கழகத்தில் பணம் கொடுத்து படிப்பிக்கின்றனர்.நாம் பாடசாலையில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இலஞ்சம் கொடுத்து நாமாகவே செலவை உண்டு பண்ணுகின்றோம். பூனையை தூக்கி மடியில் வைத்து விட்டு குடையுது எனக் கூறுவது போல நாமாகவே கல்விச் செலவை ஏற்படுத்தி விட்டு பின்னர் புலம்புகின்றோம்.

**காசு கொடுத்து படித்தால் நல்ல படிப்பா?**

காசு கொடுத்து படித்தால் நல்ல படிப்பு, இலவசமாக படித்தால் தரமற்ற படிப்பு என்ற எண்ணத்தை நாம் மாற்ற வேண்டும். சகல ஆசிரியர்களும்,அதிபர்களும் ஒரே பயிற்சிக் கல்லூரிகளில் இருந்து பயிற்சி பெற்று வந்தவர்களே. ஆகவே கிராம நகர பாடசாலைகள்,பெரிய சிறிய பாடசாலைகள் என்ற பாகுபாடு தேவையில்லை. இவை அனைத்தும் நாமே எமக்குள் உருவாக்கிக் கொண்ட எண்ணக்கணிப்புக்கள்.சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து விட்டு சாதனை படைப்பதென்பது பெரிய விடய மல்ல. தவறான எடுகோள்களினால் நகரை நோக்கி ஓடுகின்றோம்.

இன்றைய உலகம் போட்டி வாய்ந்த உலகம். பல்திறன் ஆற்றல் கொண்ட மாணவர்களை உருவாக்க வேண்டும். ரியூசன் என்பது என்னொரு பாடசாலையாக மாறி விட்டது. முன்னர் சந்தேகங்களை தீர்க்கும் இடமாகவே ரியூசன் காணப்பட்டது. இன்று மாணவர்கள் தமது விருப்பத்தை நிறைவேற்ற நேரம் இல்லை. காரணம் ரியூசன் பாடசாலை என மாறி மாறி ஓடுவது. மாணவர்களுடைய விருப்பங்களை மழுங்கடித்து அவர்களை புத்தகப்பூச்சிகளாக்குகின்றோம்.

பல்துறை ஆற்றலை வளர்க்க வேண்டும் என்றால் மாணவனுடைய நேரத்தை மீதப்படுத்த வேண்டும். அதற்கு அருகில் உள்ள பாடசாலைக்கு மாணவனை அனுப்ப வேண்டும். இதனால் வேறு துறைகளை பயில்வதற்கு மாணவனுக்கு நேரம் கிடைக்கும். நகரை நோக்கி ஓடும் மனோபாவத்தில் ஒரு மாற்றம் வர வேண்டும். பிள்ளைகளுக்கு கல்வி என்பது சுகமான சுமையாக இருக்க வேண்டுமே தவிர வலியான சுமையாக இருக்கக் கூடாது. கல்வி என்பது ஒரு தேடல். சுதந்திரமாகக் கற்க விட வேண்டும். இவ்வாறு செய்தால் ஒவ்வொரு பிள்ளையும் வல்லுநராவர். எந்தப் பாடசாலையில் படித்தோம் என்பது பெருமையா? அல்லது எங்களால் இந்த பாடசாலை பெருமை அடைவது பெருமையா? என்பதை மாணவர்கள் உணர வேண்டும். வெளிவரவிருக்கும் சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் எமது மாகாணம் கடந்த வருடத்திலும் பார்க்க முன்னிலை வகிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எனத் தெரிவித்தார். (இ-21)

# மஹிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்க வேண்டும் என்கிறார் சம்பிக்க!

கொழும்பு, பெப். 19

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அமைப்பும் இணைந்த கூட்டணி நாட்டை ஆட்சி செய்வதனையே மக்கள் விரும்புகின்றனர் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



அதேநேரம், ஆட்சியமைக்கும் இந்தக் கூட்டணி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயை எதிர்க்கட்சியாகவும் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறுகள் நடைமுறையிலுள்ள அரசு மீதான நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளது. இதனால், தற்போதைய அரசில் பாரிய மாற்றம் முன்னெடுக்கப்பட வேண்டியது கட்டாயம். எதிர்வரும் 18 மாதங்களுக்குள் அரசு உரிய முறையில் இதனை அணுக வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் கொள்கைகளில் மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும். நாட்டை மேலும் பலம் பொருந்தியதாக்குவதற்கு திறமையும் நுட்பமும் நிறைந்த இளைஞர்களுக்கு கட்சியில் வாய்ப்பளிக்க வேண்டும்.

அதேநேரம், நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதற்காகவும் கட்சி பாடுபட வேண்டும். இல்லையேல் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வருடம் செப்ரெம்பரிலும் அடுத்த வருடம் ஏப்ரலிலும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் தோல்வியை சந்திக்க நேரிடும்.

அதனைத் தொடர்ந்து 2020 இல் ஆட்சியைக் கைப்பற்றுவதென்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெறும் கனவாகவே இருக்கும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும் உண்மையில் அது சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குரிய வெற்றியாகவே ஜாதிக ஹெலஉறுமய கருதுகின்றது.

எவ்வாறாயினும் தற்போது மக்களின் ஆணையை ஏற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அமைப்புக்கும் இடையில் கூட்டணியொன்றை அமைப்பதுவே இதற்குரிய சிறந்த தீர்வாக அமையும் எனக்கு குறிப்பிட்டுள்ளார்.

# நான் சமாதானப் பறவையாக செயற்பட்டு வருகின்றேன்

## பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும்இடையில்நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஈடுபட்டுள்ளார்.



இருவருக்கும் இடையில் நிலவி வரும் முரண்பாடுகளையும் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ரஞ்சன் ராம நாயக்க இரு வருக்கும் இடையில் தாம் ஒரு சமாதானப் பறவையாக செயற்பட்டு வருகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்ந்தும் செயற்படுவது தொடர்பில் சில தரப்பினர் ஜனாதிபதிக்கு அழுத்தங்களைகப் பிரயோகித்து வருகின்றனர்.

நான் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் நெருக்கமாக செயற்பட்டு வருகிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்து மாமன்றத்தின் தலைவர் நீலகண்டன் காலமானார்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையின் தலைவரும் சட் டத்தரணியுமான கந்தையா நீல கண்டன் (வயது - 71) நேற்றுப் பிற்பகல் 2.30மணியளவில் கொழும்பில் காலமானார்.

சிறந்த சமூக, சமய சேவையாளராக விளங்கிய இவர், வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று சட்டக் கல்லூரிக்கு சென்று இளம் வயதிலேயே சட்டத்தரணியானார். கடந்தஐம்பதுஆண்டுகாலமாகசட்டத்துறையிலும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சியிலும் அயராது உழைத்தவர். இந்துக்களுக்காக என்றும் குரல் கொடுத்து வந்த இவர், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவராகவும், கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியவர். நெருக்கடியான காலகட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அகதிகளாக அல்லலுற்றவர்களுக்குப் பேருதவி புரிந்தவர். இப்போதுவரை இலங்கை மனிதநேய அமைப்பின் செயலாளராக பல ஆதரவற்ற சிறுவர் இல்லங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொண்டாற்றி வந்தவர். நேற்றும் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆன்மீக நிகழ்ச்சி ஒன்றுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு தனது வீட்டிற்கு சென்ற வேளையில் திடீரென மாரடைப்பால் காலமானார்.

கொழும்பில் உள்ள நீலகண்டன் அன் நீலகண்டன் சட்ட ஆலோசனை நிறுவனத்தின் அதிபராகிய இவரின், மனைவி, பிள்ளைகள் மூவரும் சட்டத்தரணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க் கட்சித் தலைவர் பதவி; விட்டுக் கொடுக்க இடமில்லை

## சுமந்திரன் கூறுகின்றார்



கொழும்பு, பெப். 19

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ தரப்பிற்கு வழங்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அதிக வாக்குகளை பெற்றுள்ள நிலையில், அவர்களுக்கு எதிர்க்கட்சி அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பொன்றில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகையில், ஜனநாயக ரீதியில் சிந்தித்தால் இப்போதுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினரை பிரதான எதிர்க்கட்சியாக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பி. கருத்து வெளியிடுகையில், “ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தை அவர்களின் தரப்பு பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தட்டிப்பறிக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியும் தனித்து தமது புதிய கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினால் அடுத்தகட்ட செயற்பாடுகள் குறித்து பார்க்கலாம்” – எனக் கூறினார்.

## சம்பந்தனின் பதவியைப் பறித்து

# தமிழ் மக்களின் சாபத்துக்கு கூட்டு எதிரணி உள்ளாகாது

## இப்படிக் கூறுகின்றார் வாசுதேவ



கொழும்பு, பெப். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பறித்து தமிழ் மக்களின் சாபத்திற்குக் கூட்டு எதிரணி ஒருபொழுதும் உள்ளாகாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி விலகலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டு எதிரணி இணக்கமாகச் செயற்படும். – எனக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் பதவியை கூட்டு எதிரணி கைப்பற்றப் போவதாக தவறான வதந்திகள் பரப்பப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். அரியாலைப் பகுதியில் 4 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ். அரியாலை பூம்புகார் பகுதியில் 4 கிலோ கிராம் கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோவின் தலைமையிலான புலனாய்வுப் பிரிவினரால் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். சாவகச்சேரி – கோவிலாக்கண்டிப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய இந்த நபர் சுமார் 5 லட்சம் பெறுமதியுடைய 4 கிலோ கேரளா கஞ்சாவை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதிக்கு கொண்டு வந்திருக்கிறார். அதனை வாங்க வருவார்கள் எனக் கூறிய நபர்களுக்காக அந்த நபர் காத்திருந்துள்ளார்.

அச்சமயமே அவர் கைது செய்யப்பட்டார். பொலிஸ் விசாரணையின் பின்னர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களுவன்கேணி கடலில் மூழ்கி நுவரெலியா மாணவன் பலி

நண்பர்களுடன் குளிக்க சென்ற 16 வயதுடைய ராஜா டென்வர் கிருபா என்ற மாணவன் செங்கலடி – களுவன்கேணி கடலில் மூழ்கி பலியாகியுள்ளான்.


இச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

சடலம் கண்டெடுக்கப்பட்டு செங்கலடி பிரேதச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

என்போல்ட், லிந்துலை, தலவாக்கலை, நுவரெலியாவைப் பிறப்பிடமாக கொண்ட இம் மாணவன் க.பொ.த. உயர்தரத்தில், தொழில்நுட்பத் துறையில் மட்டக்களப்பில் கல்வி கற்பதற்கு, வந்தாறுமூலையிலுள்ள உறவினர் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இவரது சடலத்தை அடையாளம் காண பெற்றோர்கள் நுவரெலியாவிலிருந்து, செங்கலடிக்கு வரவேண்டியிருந்தமையால் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் இன்றே பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆஸியிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் கட்டுநாயக்காவில் நேற்றுக் கைது!



சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியா சென்ற ஒருவர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். நாடு கடத்தப்பட்ட அந்த இலங்கையர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 2012ஆம் ஆண்டு 44 பேருடன் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்றுள்ளார் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று மினுவாங்கொட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நாளை 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.